அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 20 | ஜனவரி 2023 | திருவள்ளுவர் ஆண்டு 2053



# வீட்டினுள் வெடித்த முரண்பாடுகள்





## அன்று கருணா இன்று தமிழரசுக் கட்சியா?

## ஒரு சாதனைப் பெண்ணின் கதை!!





பிரபா அன்பு

# ஈழநிலம்

எம் ஈழநிலத்தை ஆக்கிரமித்த
கரிய வானமே
எப்போது நாங்கள்
விடியலைக் காண்பது..?

நாடிழந்துஉரிமை இழந்து
எம் அடையாளம் தொலைத்து
நாதியற்றுக் கிடக்கிறோம்!

கோரமாகவதைக்கப்பட்டு
உறவுகளை இழந்து
கண்களில்நீர் கசிய
வடுக்களோடு போராடுகிறோம்!

உடன் வந்தவர்
தாய் மண்ணை முத்தமிட்டதால்
ஊற்றெடுக்கும்
எங்கள் கண்ணீரும்
கரைபுரண்டோடுகிறது!
ஆற்றிட முடியாமல் தவிக்கிறோம்!

சுதந்திர தேசம்தனில்
எம் கைகளிற்குவிலங்கிட்டதுயார்?

எங்கள் வார்த்தைகளை
கொய்தெடுத்ததுயார்?
மௌனத்தைஎமக்குப்
பரிசளித்தது யார்?

மண்ணின் மடியில்உறங்கும்
உயிர்க்கொடையாளர்கள்
உலவிய நிலமது,
விடிவின்றி அஸ்தமனமாகியதே.



சூளையில்அடுக்கிய செங்கல்லாக,
எங்கள் மனம்
வெம்பி வெடிக்கிறது!
கண்ணீர்ச்சிதிலங்கள்
ஓய்ந்திட வேண்டும்!!
நீறாகிய எங்கள் தாய்நிலம் - மீண்டும்
கருவறையைச் சுமக்க வேண்டும்!!

எங்கள் இனம்
தழைத்தோங்க வேண்டும்!
களிப்போடு எம் மண்ணில்
நாங்கள் கூடி மகிழவேண்டும்!

புனிதம் காத்திட
எங்கள் தாய்த்தேசத்தின்
உரிமைகள்
எமக்கு வேண்டும்!!

சூதும் வாதும்
கைதுகளும் முட்கம்பிகளும்
எமை ஆக்கிரமித்தாலும்
அடங்காப்பற்றின் வீரம்
தணிந்து போகாது

மாத இதழ் | மணம்: 20
ஜனவரி
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

# உள்ளடக்கம்...


| | |
|---|---|
| ஆசிரியர் கருத்து... | 03 |
| வீட்டினுள் வெடித்த... | 06 |
| அன்று கருணா... | 09 |
| முள்ளிவாய்க்காலில்... | 12 |
| ஆழிப்பேரலை சுனாமியில்.... | 14 |
| ஒரு சாதனைப்... | 18 |
| ஆரோக்கிய .... | 20 |
| மனிதம் மலரட்டும் (கவிதை)... | 22 |
| சீரழியும் இளைய... | 23 |
| வன அழிப்பைத்... | 26 |
| சே குவேரா (அங்கம்: 02).... | 30 |
| முதுமையில் தனிமை.. | 33 |
| வலை ( அங்கம்: 06)... | 36 |
| சாயக் கோப்பை (கவிதை) ... | 38 |
















## திருக்குறள்

**குறள் 1033:**

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்”

**விளக்க உரை:**

உழவு செய்து அதனால் கிடைத்ததைக் கொண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர், மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே.

அட்டைப்படம் அருமையான கருத்துப் படம். உழைத்து குடும்பத்தைப் பார்க்கவென்று வெளிநாடு சென்றவரின் வாழ்க்கை பற்றிய அன்புவின் கவிதை அருமை. அவர்கள் படும் இன்னல்கள் இன்னும் ஏராளம். ஆசிரியர் பக்கம் வழமைபோல நன்று என்றாலும் என்று இந்த நிலை மாறும் என்ற கசப்பு மனதைப் பிசைவதைத் தவிர்க்க முடியவில்லை.

**சியாமளா**
**குரொய்டன், லண்டன்**

புத்தகம் மிகவும் அருமை. எளிமையாகவும் தெளிவாகவும் நாட்டு நிலைமையைத் தெரிவிக்கிறது அட்டைப்படம்.

தாயகத்தின் நாளாந்தப் பிரச்சனைகள், குறிப்பாக பெண்களின் அவலங்கள் வெளிக் கொணரப்படுவது குறைவாகவே இருக்கிறது.

இதனைக் கவனித்து சரிசெய்வீர்களா? வலை சிறுகதை அடுத்த அங்கம் எப்போது வரும் என்று எதிர்பார்க்க வைக்கிறது.

எளிமையாகவும் இயல்பாகவும் புனையப்படுவதாக இருப்பது சிறப்பு. வாழ்க.

**தில்லைநாயகம்**
**ஜேர்மனி**

தகுதிக்கு மீறி கடன் வாங்குவதும் கட்ட முடியாமல் தற்கொலை செய்வதும் இப்போது நாளாந்த செய்திகளாகி விட்டது.

கொடுமை. அன்னை கவிதையை ரசித்து எழுதியிருக்கிறார் கவிஞர். சினிமா விமர்சனம் பக்கம் நன்று.

ஈழத்து சினிமாக்களின் விமர்சனங்களை தொடர்ச்சியாக எழுதலாமே. மற்றவர்களை பார்க்கத் தூண்டுவதாக அமையும் என்பது என்னுடைய கருத்து.

**சுந்தரி சிவபாலன்**
**ஸ்பெயின்**




பிரச்சனை முடிந்தது என்று காட்ட அரசாங்கம் படாதபாடு படுகிறது, ஆனால் கொலைகள் முடிந்தபாடாய் இல்லை.

ஷாப்டரின் கொலை ஒரு உதாரணம். கடல் வளமும் பறிபோகிறது என்று தெரிந்தாலும் புள்ளிவிபரத்துடன் தெரியும்போது மனது பதைக்கிறது.

புதுவை இரத்தினதுரை ஒரு அருமையான கவிஞர்.

துரோகத்தால் ஒரு அற்புதக் கவிஞனையும் தொலைத்து விட்டோம்.

**ஸ்ரெல்லா மேரி ஜோசப்**
**ஒன்ராறியோ.**




புத்தகத்தின் இடையிடையே வரும் குட்டிக் கதைகள் சூப்பர்.

காணாமல் போனவர் கவிதை பார்த்தபின் தூங்கவே முடியவில்லை.

மலையக மக்களின் பிரச்சனைகள் எப்பதான் தீரும்.

பிற நாடுகளின் போராட்டங்கள் தொடர்பான தகவல்கள் உத்வேகமூட்டுவதாக இருக்கிறது.

**திருமலை**
**வெங்கடாச்சலம்**
**திருச்சி, இந்தியா.**

மிதயா கானவியின் கவிதைகளில் எப்போதும் ஒரு ஏக்கமும் தவிப்பும் இழையோடுகிறது.

சே குவேராவின் வரலாறு மீண்டும் மீண்டும் எங்கள் குழந்தைகளின் நினைவைத் தூண்டுவதைத் தவிர்க்க முடியவில்லை.

இழப்பு இழப்புத்தான். பனை வளர்ப்போம். பயன் பெறுவோம்.

**பாஸ்கரன்**
**பெல்ஜியம்**

தாயகம் தொடர்பான ஆக்கங்களை அதிகமாகப் போடுங்களேன்.

கவிதைகள், அட்டைப்படம், குறிப்பாக நெடுங்கதை சிறப்பு.

கட்டுரைகள் யதார்த்தம்.

**நிர்மலா சர்வேசன்**
**பிரான்ஸ்**

பாலா அண்ணரைப்பற்றி இவ்வளவு சிறியதாகப் போட்டிருக்கிறீர்களே.

மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறது. பார்த்தீனியம் பற்றிய அறிவுறுத்தல் அவசியம். நானும் பார்த்திருக்கிறேன் ஆனால் இவ்வளவுக்கு பாதிப்பைக் கொடுக்கும் என்று இப்போதுதான் தெரிகிறது. அதைவிடவும் மோசமான விஷச்செடி போதைப்பழக்கம்.

தயவு செய்து தொடர்ந்தும் அறிவுறுத்துங்கள்.

வலை கதை எங்கள் வீடுகளில் நடப்பது போலுள்ளது என்பதாலோ என்னவோ எல்லோருக்கும் பிடித்திருக்கிறது.

**தமிழுக்கு மகன்**
**வவுனியா**

**ஆக்கப்பூர்வமான உங்கள் எழுத்தாற்றலை**
**வெளிக் கொணர்வதற்கு அரிய வாய்ப்பு**

அரசியல் கட்டுரைகள், பத்தி கட்டுரைகள், சிறுகதைகள் , கலை, கலாசார, சமூக ஆக்கங்களையும் உங்கள் படைப்புக்களையும் எமக்கு அனுப்பி வைக்கலாம்.




ezhunilam@yahoo.com

# எட்டாக் கனியாகுமா தீர்வு?

## ஆசிரியர் பக்கம்

அடுத்த சுதந்திர தினத்தினுள் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காணப் போவதாக சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சூழுரைத்திருந்தது ஞாபகமிருக்கும். சுதந்திர தினத்திற்கு இன்னும் சில நாட்களே இருக்கும் நிலையில், கண்ணுக்கெட்டிய தூரம்வரை எந்தத் தீர்வும் எட்டப்பட்டதாகத் தெரியவில்லை. அதற்காக சாத்தியம் இருப்பதாகவும் தெரியவில்லை.

தமிழ்க் கட்சிகள் பல ரணில் தலைமையிலான சர்வகட்சி மாநாட்டைப் புறக்கணித்திருக்கின்றன. அரசியற் கைதிகள் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான முடிவு, நிலப்பறிப்பு நிறுத்தம் என்ற பொதுப் பிரச்சனைகளையே கருத்தில் எடுக்காத மாநாட்டில் கலந்து கொள்வதில் பயனில்லை என்பது இவர்களின் கருத்து.



பெரிய கட்சி, சிறிய கட்சி என்ற வேறுபாடில்லாது அனைவரும் கூடி, எல்லோருடைய கருத்துக்களையும் செவிமடுத்து தீர்க்கவியலாத பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக நாடுகள் சர்வகட்சி மாநாடுகளைக் கூட்டுவது வழமை. இலங்கை மட்டும் இதற்கு விதிவிலக்கு. எந்தப் பிரச்சனையைத் தட்டிக் கழிக்க வேண்டுமோ அதைப்பற்றி முடிவில்லாமற் பேசுவதற்காகத்தான் இங்கு சர்வ கட்சி மாநாடுகள் நடத்தப்படுகின்றன என்பதை ஜெயவர்தன, பிறேமதாச காலங்களில் நடந்த இரு மாநாடுகள் எங்களுக்கு உணர்த்தியிருக்கின்றன.

தனக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் 13ம் திருத்தச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்து தமிழ் மனங்களைக் குளிர்விக்கப் போவதாகச் சொல்கிறார் ரணில். இதில் விருப்பமில்லாத எந்தவொரு பாராளுமன்றப் பிரதிநிதியும் 13ம் திருத்தச் சட்டத்தை நீக்க பிரேரணை வைக்கலாம் என்று ஒரு வாய்ப்பையும் வழங்கியிருக்கிறார்.

காணி ஆணைக்குழுவொன்றை அமைத்து, அவர்கள் எடுக்கும் முடிவுகளை முப்படைகளுடனும் கலந்தாலோசித்து எடுக்கப்படும் இறுதி முடிவின் பின், எஞ்சியுள்ள 3000 ஏக்கர் தமிழர் நிலமும் கையளிக்கப்படும் என்பதன் மூலம் அனைத்து சிங்கள மக்களினதும், சிங்களக் கட்சிகளினதும் மனதில் இடம் பிடித்துவிட்டார். 3000 ஏக்கர் நிலம் மட்டும் என்பதன் மூலம், மாநாட்டில் பங்குபற்ற வேண்டிய தேவை இல்லாமலேயே தமிழ் மக்களுக்கு பட்டை நாமம்தான் என்பது தெளிவாகவே உணர்த்தப்பட்டிருக்கிறது.. எங்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான உரிமைகளைக் கருத்தில் எடுக்கவும் இவர்கள் தயாராக இல்லை. இந்த நிலையில், அதிகாரப் பகிர்விற்கு எதிரான கருத்துக்களை பல சிங்களக் கட்சிகள் ஏற்கனவே வெளியிட ஆரம்பித்து விட்டன.

13 ஐ நடைமுறைப்படுத்துவது தொடர்பில் தமிழ்க் கட்சிகள் சிலருடன் கூட்டாகவும் சிலருடன் தனித்தனியாகவும் பேசிவிட்டுத்தான் நாடு திரும்பியிருக்கிறார் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர். 13 இற்கு அப்பால் செல்வதில்லை என்ற முடிவில் இருக்கும் இந்தியா 13ம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு இலங்கைக்கும் அறிவுறுத்தியுள்ளது.

ஒன்றுபட்டு நின்றால்தான் எங்கள் உரிமைகளை பெற்றெடுக்க முடியும் என்ற நிலையில், கதிரைகளைக் கைப்பற்றுவதற்காக உள்ளூராட்சித் தேர்தல்களிலேயே எதிரும் புதிருமாக நிற்கிறார்கள் எங்கள் தரப்பு அரசியல்வாதிகள். ஏகோபித்த குரலில் தமிழர்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு கேட்பார்கள் என்ற அச்சமும் இப்போது ரணிலுக்கு இல்லை. நாளாந்தம் பறிபோகும் நிலம், பொருளாதார சுபீட்சமற்ற நிலை, அரசியல் வங்குரோத்து என்ற சூழ்நிலையில், தமிழ் மக்களின் எதிர்காலம் என்னவாகும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

பாரி




# வீட்டினுள் வெடித்த முரண்பாடுகள்

## மக்கள் என்ன நினைக்கிறார்கள்?

நடக்கவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதிலும், தாம் சார்ந்து நிற்கும் கட்சிகளின் நிலைப்பாடுகளை மக்களிடையே கொண்டுசென்று வாக்குகளைத் தம்பக்கம் ஈர்ப்பதிலும் கட்சிகள் மும்முரமாக இறங்கி விட்டன. இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் தாம் தனித்து நின்று போட்டியிடப் போவதாக அறிவித்து, தமது வீட்டுச் சின்னத்துடன் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியிருக்கிறது தமிழரசுக் கட்சி.

இதனால், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான ரெலோவும், புளொட்டும் சின்னமின்றித் தனித்து விடப்பட்ட நிலையில், ஏற்கெனவே கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய ஈ.பி.ஆர்.எல்.எஃப் உடனும், ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ் தேசியக் கட்சி என்பனவற்றுடனும் இணைந்து புதிய கூட்டமைப்பொன்றை ஏற்படுத்தி விட்டன. போராளி அமைப்புக்கள் கூட்டமைப்பைக் கைப்பற்றியிருப்பதாகவும் தாம் முன்பிருந்ததை விடவும் பலமாக இருப்பதாகவும் மார்தட்டுகிறார்கள் இவர்கள். இந்தப் புதிய கூட்டமைப்பு, புளொட்டின் இன்னுமொரு கட்சியாகவிருந்த சனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் ஒன்றாகி, சனநாயக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற பெயரில், அவர்களின் குத்துவிளக்கு சின்னத்தில் களமிறங்குகிறது.

வீடு தனியாகக் களமிறங்கியுள்ள நிலையில். அது வெற்றி பெறுமா, அல்லது கூட்டணியின் நிலையைச் சென்றடையுமா? கூட்டமைப்பின் ஆரம்பகாலக் கட்சிகளில் பலம் பொருந்தியதாக இருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி தனது சின்னமான






உதயசூரியனுடன் 2004 இல் கூட்டமைப்பை விட்டு விலகி தனியாகச் சென்றது. இதன் பின்னர், மக்களின் செல்வாக்கிழந்து, கிட்டத்தட்ட காணாமல் போனது. இது போல தமிழரசுக் கட்சியும் ஆகிவிடுமா என்று ஒரு விவாதமும் இருக்கிறது.

கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டபோது உள்ளெடுக்கப்பட்ட கட்சியல்ல தமிழரசுக் கட்சி. புலி நீக்க அரசியல் புரிந்த ஆனந்த சங்கரி தமது சின்னத்தில் கூட்டமைப்பு போட்டியிடுவதை அனுமதிக்க மறுத்து, கூட்டமைப்பிலிருந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை விலக்கிக் கொண்டார். இதன் பின்னர், 2004 இல், வீட்டுச் சின்னத்துடன் கூட்டமைப்பினுள் உள்வாங்கப்பட்டதுதான் தமிழரசுக் கட்சி.

2004 இன் பின், கூட்டமைப்பில் பலம் பொருந்திய கட்சியாகவும், மக்களுக்கு நன்கு தெரிந்த, வரலாற்றுப் பின்புலமுள்ள கட்சியாகவும் இருந்தது தமிழரசுக் கட்சி. விடுதலைப்புலிகளின் காலத்தில் அவர்களின் அனுசரணையில் வளர்த்து விடப்பட்டதாகச் சொல்லப்படும் இந்தக் கூட்டமைப்புக்கு மக்கள் தங்கள் ஆதரவுக் கரம் கொடுத்து வெற்றிபெறச் செய்திருந்தனர். நன்கறியப்பட்ட தமிழரசுக் கட்சியும் அதன் வீட்டுச் சின்னமும் மிக முக்கியமாகப் புலிகள் இந்தக் கூட்டமைப்புக்கு தமது ஆதரவைக் கொடுத்ததும் தான் கூட்டமைப்பு 2001 இல் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு இதுவரை நிலைத்து நின்றதற்குக் காரணம் என்பது யாவரும் அறிந்ததே. தனித்து, வீட்டுச் சின்னமும் இல்லாமல் விடப்பட்டால் ரெலோவும் புளொட்டும் காணாமற் போய்விடுவார்கள் என்பதுதான் பின்னாளில் தமிழரசுக் கட்சி கூட்டமைப்பினுள் தன்னிச்சையாக, செருக்குடன் இயங்கக் காரணமாகவும் இருந்தது. 2009 இற்குப் பின்னர் தேர்தலை மட்டுமே மையப்படுத்தி 'லிவிங் ருகெதர்' இல் இருந்தவர்கள்தான் கூட்டமைப்புக்குள் இருந்த கட்சியினர். மக்களுக்காக இவர்கள் சாதித்தது எதுவுமில்லை. தமக்குள் ஆயிரம் முரண்பாடுகளை வைத்திருந்தனர். மாறிமாறிக் குற்றம் சுமத்துவதும் சேற்றை வாரி இறைப்பதுமாக உள்ளுக்குள் பூசலுடன், எந்த நேரத்திலும் பிரிவு ஏற்படலாம் என்ற நிலையிற்தான் கூட்டமைப்பு இருந்தது.

கூட்டமைப்பின் சட்ட திட்டங்களுக்கு இணங்காமல் தன்னிச்சையாக முடிவெடுத்து அறிவிப்புகளை வெளியிடுவது, இராசதந்திரிகளைச் தனியாகச் சந்தித்துக் கதைப்பது என்று தனிவழியில் இறுமாப்புடன் பயணித்த தமிழரசுக் கட்சியினரில், குறிப்பாக அதன் பேச்சாளரான சட்டத்தரணி சுமந்திரனிலும் அதனைத் தட்டி வைக்காத கட்சித் தலைமையிலும் காழ்ப்புணர்வு இருந்தாலும் வேறு வழியின்றி முரண்பாடுகளுடன் கூட்டமைப்பினுள் இருந்தனர் ரெலோவும் புளொட்டும். இவ்வளவு பிரச்சனைகளிலும் இதுவரை காலமும் கூட்டமைப்பு உடைந்து போகாமல் கட்டிக்காத்த பெருமை சம்பந்தன் ஐயாவையே சாரும்.

தமிழரசுக் கட்சியின் தலைமையிலுள்ள மாவை சேனாதிராசா அவர்களும் தன் கட்சியில் செல்வாக்கை இழந்த நிலையில் தான் உள்ளார். எந்த நேரத்திலும், கட்சிப் பொதுக்குழு கூடும்போது அவர் தலைமைப் பதவியில் இருந்து இறக்கப்படலாம் என்ற நிலையில், முடிந்தவரை அதனை ஒத்தி வைக்கப் பாடுபடுகிறார் மாவை. சம்பந்தன் ஐயாவும் தளர்ந்து போய் விட்டார். தமிழரசுக் கட்சியினுள் கட்சியின் பேச்சாளர்

**வீடு இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம் என்பார்கள். இப்போது தமிழ்க்கட்சிகள் இப்படி தனித்தனியாக சிதறிக் கிடப்பது உண்மையிலேயே சிங்கள அரசுக்குக் கிடைத்த வெற்றியாகத்தான் பார்க்கப் படுகிறது. இது ஒரு பரிசோதனைதான், வாக்குகளை அள்ளுவதற்காகவே தனித்து நின்று இந்த உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகிறோம், அதிக இடங்களைக் கைப்பற்றியதன் பின் ஒன்றாக இயங்குவோம். என்று சம்பந்தன் தரப்பால் சொல்லப்பட்டாலும், ஒட்டுக் குழுக்களுடன் எம்மால் இயங்க முடியாது, இவர்களின் கைகளில் இரத்தக்கறை படிந்துள்ளது என்பன போன்ற கூற்றுக்கள், தமிழரசுக் கட்சி முன்னைநாள் போராளிக் கட்சிகளுடன் மீண்டும் சேர்ந்தியங்கும் சாத்தியத்தை முற்றாகத் தவிர்ப்பதைப் பார்க்கக் கூடியதாக உள்ளது.**



சுமந்திரனுக்கும் கிளிநொச்சி பாராளுமன்றப் பிரதிநிதியான சிறிதரனுக்கும் இடையில் 'நீயா நானா?' என்ற தலைமைப் போட்டி உச்சத்தில் இருப்பதும் மக்களுக்குத் தெரியும். ஆக, உள்ளும் புறமுமாக பிளவுபட்டு நிற்கிறது வீடு.

'வீடு இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்' என்பார்கள். இப்போது தமிழ்க்கட்சிகள் இப்படி தனித்தனியாக சிதறிக் கிடப்பது உண்மையிலேயே சிங்கள அரசுக்குக் கிடைத்த வெற்றியாகத்தான் பார்க்கப் படுகிறது. 'இது ஒரு பரிசோதனைதான், வாக்குகளை அள்ளுவதற்காகவே தனித்து நின்று இந்த உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகிறோம், அதிக இடங்களைக் கைப்பற்றியதன் பின் ஒன்றாக இயங்குவோம்.' என்று சம்பந்தன் தரப்பால் சொல்லப்பட்டாலும், 'ஒட்டுக் குழுக்களுடன் எம்மால் இயங்க முடியாது, இவர்களின் கைகளில் இரத்தக்கறை படிந்துள்ளது' என்பன போன்ற கூற்றுக்கள், தமிழரசுக் கட்சி முன்னைநாள் போராளிக் கட்சிகளுடன் மீண்டும் சேர்ந்தியங்கும் சாத்தியத்தை முற்றாகத் தவிர்ப்பதைப் பார்க்கக் கூடியதாக உள்ளது.


> **விடுதலைப் புலிகளுக்குப் பின்னர் எந்தக் கட்சியும் அல்லது அமைப்பும் மக்கள் நலன் சார்ந்தோ அல்லது எமது தேச நலன் சார்ந்தோ இயங்கவில்லை. பதவி ஆசையுடன். தேர்தலில் வெற்றி பெறுவது ஒன்றே குறியாக தமக்குள் இணைவதும் பிரிவதுமாக இருக்கும் இந்த அரசியலில் மக்கள் நம்பிக்கை இழந்து வெகு காலமாகி விட்டது. இப்போது தமிழருக்கிருந்த ஒரே பலமான கூட்டமைப்பும் சிதறிச் சின்னாபின்னமாகி விட்டது. வீட்டை மக்கள் தமது பிரதிநிதிக் கட்சியாக அங்கீகரிப்பார்களா என்பது உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளில் தெரிந்துவிடும்.**

ஆயுதம் தூக்காமல் எழுபது ஆண்டுகளாக அரசியல் செய்யும் இவர்களும் ஒன்றும் அவ்வளவு நல்லவர்கள் கிடையாது. புலிகளின் ஆதரவில் வளர்ச்சியடைந்தாலும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு காலத்துக்குக் காலம் இவர்களும் சிங்கள அரசுடன் இணைந்தும் இணங்கியும் புலி எதிர்ப்பு அரசியல் செய்தவர்கள் தான். அதேபோல இராணுவத்தின் கையாட்கள் என்று சொல்லப்படும் இந்த ஆயுதம் எடுத்தவர்களும் அரசுடன் இணைந்து அதன் கையாட்களாக இயங்கிய அதே சமயத்தில் அரசியல் நீரோட்டத்திலும் தம்மை இணைத்து இயங்க முன் வந்திருப்பதையும் மறுக்க முடியாது.

விடுதலைப் புலிகளுக்குப் பின்னர் எந்தக் கட்சியும் அல்லது அமைப்பும் மக்கள் நலன் சார்ந்தோ அல்லது எமது தேச நலன் சார்ந்தோ இயங்கவில்லை. பதவி ஆசையுடன். தேர்தலில் வெற்றி பெறுவது ஒன்றே குறியாக தமக்குள் இணைவதும் பிரிவதுமாக இருக்கும் இந்த அரசியலில் மக்கள் நம்பிக்கை இழந்து வெகு காலமாகி விட்டது. இப்போது தமிழருக்கிருந்த ஒரே பலமான கூட்டமைப்பும் சிதறிச் சின்னாபின்னமாகி விட்டது. வீட்டை மக்கள் தமது பிரதிநிதிக் கட்சியாக அங்கீகரிப்பார்களா என்பது உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளில் தெரிந்துவிடும்.

பழைய விசுவாசத்தில் மக்கள் தமிழரசுக் கட்சிக்கு கூடுதல் வாக்களிக்கும் வாய்ப்புகளும் வரலாம். அதேசமயம் சிதறுண்டு கிடக்கும் கட்சிகளால் வாக்குகள் சிதறிப் போகும் வாய்ப்புகளுமுண்டு. கூட்டணிக்கு ஏற்பட்ட முடிவுபோல் அல்லாது, இவர்களில் இருந்து தமிழரசுக் கட்சி பலமான கட்சியாக உருவாகி எழுந்தால். அதற்குப் போட்டியாக பலமான கட்சி ஒன்று உருவாக்கப்பட வேண்டிய கட்டாயம் ஒன்றுண்டு. எதிரணி ஒன்று இருக்கும் போதுதான் தமிழரசுக்கட்சி தான்தோன்றித்தனமாக நடப்பது எதிர்காலத்தில் தவிர்க்கப்படும்.

இதுவரை காலமும் தமிழ் மக்களை வைத்துப் பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த இந்தப் பழைய பெருச்சாளிகளினால் எம் இனத்திற்கு எந்த ஆதாயமும் இருக்கவில்லை. அரசியலினுள் நாட்டுப்பற்றும் இனப்பற்றும் உள்ள, படித்த இளைய சமுதாயம் உள்வாங்கப்பட வேண்டும். கதிரைக்காக அடிபடாமல் மனிதத்துக்காக சேவை செய்யும் மனப்பாங்குள்ளவர்கள் இணைந்து கொள்ள வேண்டும். அரசியல் என்பது வியாபாரமல்ல, அது ஒரு சேவை என்பதைப் புரிந்துகொண்ட ஒரு புதிய அரசியற் பாதை உருவாக வேண்டும். இளைய தலைமுறையினர் இதனைக் கருத்தில் எடுப்பார்களா?





வி.தேவராஜ்
(மூத்த ஊடகவியலாளர்)

# அன்று கருணா இன்று தமிழரசுக்கட்சியா?

**தமிழ் மக்களின் வினா?**

**2009** இல் போர் மௌனிக்கப்பட்ட பின், கடந்த 14 வருட கால வரலாறு தமிழ்த் தலைமைகளின் பொறுப்பற்ற தன்மை, ஒற்றுமை இன்மை தமிழ்த் தலைமைகளிடையே நிலவுகின்ற நாடாளுமன்ற மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான நாற்காலிகளுக்காக நடைபெறும் போட்டா போட்டி என்பன தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்த பழைய நினைவுகளை மக்கள் மீட்டுப் பார்க்கும் நிலைக்குத் தள்ளியுள்ளது.

## தமிழ்ச் சமுகத்தின் சமுகக் கட்டமைப்பு தகர்ந்தது

போர் காலத்திலும் வடக்குக் கிழக்கில் தமிழ்ச் சமூகத்தின் சமுகக் கட்டமைப்பு பாதுகாக்கப்பட்டே வந்தது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இன்று திட்டமிடப்பட்டு போதையில் மூழ்கடிக்கப்படும் தமிழ்ச் சமுகம் கலாசார சீர்கேடுகளால் இளைய சமூகம் திசைமாறிப் போய்க் கொண்டிருக்கின்றது. பெற்றோரே மனதைக் கல்லாக்கி தமது பிள்ளைகளை பொலிசாரிடம் கையளிக்கும் அவலம் போன்ற பல சமுக சீர்கேடுகளை விடுதலைப் புலிகளின் காலத்தில் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது என்ற நிலை இருந்ததை மக்களை சிந்திக்க வைத்துள்ளது.

## யாருக்காக அரசியல்?

இந்த ஒரு பின்னணியில் தமிழர் விவகாரத்தில் தீர்வை நோக்கிய பயணத்தில் மாத்திரமல்ல தமிழ்ச் சமுகம் காலம் காலமாகக் கட்டிக்காத்து வந்த சமுகப் பாதுகாப்பு கட்டமைப்பு என்பன சிதைக்கப்பட்டு சீரழிக்கப்பட்டு திசைமாறிப் போவதையும் தமிழ் தலைமைகள் கணக்கில் எடுக்கத் தவறிவிட்டன. அப்படியானால்



**நாடகங்களுக்கு மத்தியில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அறிவிப்பு வெளிவந்தது. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழரசுக் கட்சி, கூட்டமைப்பை உடைத்துக் கொண்டு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தனி வழி போவதாக அறிவித்தது.**

**2022 வரை தமிழ் மக்களின் கேடயமாக கணிக்கப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பிளவுபடுத்தவதில் ரணில் விக்ரமசிங்க வெற்றி கண்டார்.**



# அன்று கருணா
## இன்று தமிழரசுக்கட்சியா?

ஒட்டு மொத்த தமிழ்த் தலைமைகளும் யாருக்காக அரசியல் நடத்துகின்றன?

### தென்னிலங்கை அரசியல் சக்திகளின் ‘திருந்தாத போக்கு’

மறுபுறம் தென்னிலங்கையின் அரசியல் சக்திகளின் ‘திருந்தாத போக்கும்’ தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்த ஞாபகங்களை மீட்டுப் பார்க்கும் நிலைக்குத் தமிழ் மக்களை தள்ளியுள்ளது. இதுபற்றி ஒரு சில அரசியல்வாதிகளும் மக்களும் ஊடகங்களின் முன் வெளிப்படையாகவே கருத்துக்களை முன் வைத்து வருவதையும் காணக் கூடியதாக உள்ளது.

### அன்று ரணில் செய்த சதி!

2004 ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப் புலிகளில் பெரும் பிளவினை இன்றைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உருவாக்கினார். இந்தப் பிளவினை மையப்படுத்தி தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை சிங்கள ஆட்சியாளர்கள் முள்ளி வாய்க்காலில் மூழ்கடித்தனர்.

### இன்று ரணிலின் சதி!

இன்று அதே ரணில் விக்ரமசிங்க 75வது சுதந்திரத் தினத்திற்கு முன் தமிழர் விவகாரத்துக்குத் தீர்வுகாண தமிழ்த் தலைமைகளை பேச்சுவார்த்தைக்கு அழைத்தார்.

இந்த அழைப்புக்கு மத்தியில் கூட்டமைப்பின் பேச்சாளரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனுடன் தனிப்பட்ட சந்திப்புக் களையும் மேற் கொண்டார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை தனிப்பட்ட முறையில் சந்தித்து உரையாடினார். இறுதியில் பேச்சுவார்த்தை கூட்டமைப்புடன் மட்டுப்படுத்தப்பட்டது.

இந்த நாடகங்களுக்கு மத்தியில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அறிவிப்பு வெளிவந்தது. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழரசுக் கட்சி, கூட்டமைப்பை உடைத்துக் கொண்டு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தனி வழி போவதாக அறிவித்தது. 2022 வரை தமிழ் மக்களின் கேடயமாக கணிக்கப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பிளவுபடுத்தவதில் ரணில் விக்ரமசிங்க வெற்றி கண்டார்.

### கூட்டமைப்பு என்ற ‘பிம்பம்’ தகர்ந்தது.

2009 இல் போர் மௌனிக்கப்பட்ட பின், தமிழர் அரசியலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரிதாகச் சாதித்தது என்று ஒன்றும் இல்லை. ஆனால் தமிழர் தரப்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு காவல் அரண் என்ற பிம்பத்தை உருவாக்கியிருந்தது. அது இன்று தகர்க்கப்பட்டுள்ளது.

அதாவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்த வேண்டிய இன்றைய நிலையில் கூட்டமைப்பை தமது குறுகிய அரசியல் இலாபங்களுக்காக தமிழரசுக் கட்சி சிதைத்துவிட்டது. தமிழரசுக் கட்சியின் இன்றைய இந்த நகர்வு எதிர் பார்க்கப்பட்ட ஒன்றே. இது என்றோ நடந்தேறி இருக்க வேண்டிய ஒரு விடயம். காலதாமதமாகி இன்றைய சூழ்நிலையில் தமிழரசுக் கட்சி அரங்கேற்றியுள்ளது. தமிழரசுக் கட்சியைப் பொறுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரில் தமது அரசியலையே முன்னெடுத்து வந்தது. கூட்டமைப்பின் பெயரில் தனது வீட்டுச் சின்னத்தை மக்களின் மனதில் ஆழப் பதிய வைத்துள்ளது. தற்போது தனி வழி சென்று தமக்கான அரசியல் அறுவடைக்கான காலம் கனிந்துவிட்டதாக தமிழரசுக் கட்சியின் தலைமை கணக்கிட்டுள்ளது. அதன் விளைவு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் தனித்து களம் இறங்க முடிவு செய்துள்ளது.





# அன்று கருணா இன்று தமிழரசுக்கட்சியா?

**பங்காளிக் கட்சிகள் பொறுப்புக் கூற வேண்டும்**

தமிழரசுக் கட்சியின் இன்றைய இந்த முடிவுக்கு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளும் பொறுப்புக் கூற வேண்டும். 2009க்குப் பிறகு சரியான ஒரு நிலைப்பாட்டை இந்தக் கட்சிகள் எடுத்திருக்குமாயின் கூட்டமைப்பை சரியான திசையில் வழி நடத்தியிருக்க முடியும். தமிழரசுக் கட்சிக்கு நடைபெறுவதாக எதிர்பார்க்கப்படும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் தமது எதிர்கால அரசியலைத் தீர்மானிக்கும் உரைகல்.

இதற்கும் அப்பால் தமிழரசுக் கட்சியின் தரப்பில் கூறப்படுவது போன்று தேர்தல் முடிவுடன் வெற்றி பெற்ற தமிழர் தரப்புடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி அமைப்பது எல்லாம் வெறும் 'கனவான் அரசியல் வார்த்தைகளே' அன்றி வேறொன்றும் இல்லை. இந்த வார்த்தைகள் நிஜம் எனில் தற்போதுள்ள பல சபைகள் 'பிச்சுப் பிடுங்கல்' இன்றி தமிழர்களின் நலன் நோக்கி சுமுகமாக நகர்ந்திருக்கும். ஆனால் அப்படி நடக்கவில்லை என்பது பரம இரகசியமல்ல.

**தேர்தல் பிரசாரங்கள் எப்படி இருக்கும்?**

தற்போதைய நிலையில் தமிழரசுக் கட்சி தவிர்ந்த கட்சிகள் கூட்டமைப்பிற்கு வெளியில் இருக்கும் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக தேர்தலில் களம் இறங்க பேச்சு வார்த்தையில் இறங்கியுள்ளன.

**நாற்காலி அரசியலுக்காக நிர்வாணமான தமிழரசுக் கட்சி,**

தமிழ்த் தேசியத்தின் பெயரில் ஓரணியில் நின்று வாக்கு கேட்டவர்கள் தற்போது பிரிந்து நின்று வாக்கு கேட்கும் விசித்திரம் உருவாகியுள்ளது. அது மாத்திரமன்றி இதுவரை நடைபெற்ற தேர்தல்கள் அனைத்திலும் தமிழ் மக்களின் ஒற்றுமை பற்றியும் தமிழ்த் தேசியத்தைச் சிதைத்துவிடக் கூடாது என்ற சுலோகங்களுடனும் தமிழ் மக்களின் முன் நின்றவர்கள் தற்போது 'நாற்காலி அரசியலுக்காகவே' தமது அரசியல் என நிர்வாணமாக நிற்கப் போகின்றனர்.

> **தமிழ் மக்கள் பதவி மோகத்திற்கு அப்பால் தமிழர் விவகாரத்தை இலக்காகக் கொண்ட புதிய அமைப்புக் குறித்து சிந்தித்தாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஏனெனில் தமிழரசுக் கட்சி தமது அரசியலுக்காக தனி வழி போகும்போது தமிழ் மக்கள் ஏன் தமது தலைவிதியை தீர்மானிக்க முன்வரக் கூடாது? தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும்.**

**மக்களின் கோரிக்கை.**

தமிழ்க் கட்சிகள் ஓரணியில் நின்று தேர்தலை எதிர் கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை முன்வைத்து உண்ணாவிரதத்திலும் இறங்கியிருந்தனர். மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்கவோ செவி சாய்க்கவோ தமிழரசுக் கட்சி தயாராக இல்லை.

தமிழரசுக் கட்சி மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்களின் நலன்களுக்காகவும் ஆதரவாளர்களின் பதவி வேட்கைக்குத் தீனி போடவும் தமிழரசுக் கட்சி தனித்து களம் இறங்கியுள்ளது. தமிழரசுக் கட்சியின் பதவி மோகத்திற்கு மக்களே பதில் கூற வேண்டும்.

**தமிழரசுக் கட்சி - ரணில் கூட்டு சதி வெற்றி**

தமிழ் மக்கள் பதவி மோகத்திற்கு அப்பால் தமிழர் விவகாரத்தை இலக்காகக் கொண்ட புதிய அமைப்புக் குறித்து சிந்தித்தாக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஏனெனில் தமிழரசுக் கட்சி தமது அரசியலுக்காக தனி வழி போகும் போது தமிழ் மக்கள் ஏன் தமது தலைவிதியை தீர்மானிக்க முன்வரக் கூடாது? தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும்.



தமிழரசுக் கட்சி தனது அரசியல் நலன்களுக்காக தனி வழி போவது அவர்களுக்கு உள்ள ஜனநாயகம். ஆனால் தமிழர்களின் பெயரில் அரசியல் நடத்துபவர்கள் ஒற்றுமை அரசியல் நடத்துவதே தமிழர்களுக்குரிய அரசியலாகும்.. எனவேதான் தமிழ் மக்கள் அன்று கருணா இன்று தமிழரசுக் கட்சியா என வினவுகின்றனர்.

ஊர்காவலன்



# முள்ளிவாய்க்காலில் அழிந்து நந்திக்கடலில் நிமிரும்; சாம்பலில் இருந்து துளிர்த்தல்

ஈழத் தமிழினம் தன்மீதான அடக்குமுறையினை 1948 ஆம் ஆண்டு முதற்கொண்டே எதிர்கொள்ளத் தொடங்கியது. ஆனால் முரண்நகையாக அன்றைய தினமே ஶ்ரீலங்காவின் – அன்றைய சிலோனின் சுதந்திர நாளாகப் பிரகடனமாகியது. 1833 இல் அன்றைய ஆட்சியாளார்களான ஆங்கிலேயர்கள் சிலோன் எனப்படும் சிறீலங்காவை ஒற்றையாட்சியின் கீழ் கொண்டுவந்த நாளில் சுயநிர்ணய உரிமையைக் கொண்ட, இறைமையைத் தம்மிடமிருந்து பிரிக்கமுடியாது சிறீலங்காவில் வாழ்ந்து வந்த தமிழ் மற்றும் சிங்கள இனங்கள் அடிமைப்பட்டமையை நாம் வரலாற்றின் ஊடாக அறிந்திருக்கின்றோம்.

என்றாலும் 1948 இல் சிறீலங்கா சுதந்திர நாடாக ஆங்கிலேயரால் அறிவிக்கப்பட்டபோது சிங்கள இனம் தனது இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் மீளப் பெற்றுக்கொண்டது. ஆனால் அதற்கிணையாக தமிழர்களால் தமது சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அதனைத் தமிழர்களுக்கு வழங்க ஆங்கிலேயம் தயாராகவும் இருக்கவில்லை. அது ஏன்? என்ற கேள்வியே இங்கு முக்கியமானது.

வரலாற்றுத் தொடர்புடன் இதனை ஆராயமுற்பட்டபோது தான் ஆங்கிலேயத்தை அச்சமுறச்செய்தது எது என்ற உண்மை வெளிப்படத் தொடங்கியது. அந்த உண்மை என்னவென்றால் அது தமிழர்களுக்கே உரித்தான அடங்கா மண் பற்றும் சுதந்திர தாகமும் தான்.

ஆசிய நாடுகளில் எழுந்த சுதந்திரப்போர் அலையின் பாற்பட்டு தனது காலனித்துவ நாடுகளுக்கு ஆங்கிலேயம் சுதந்திரத்தை வழங்கியதே ஒழிய அச் சுதந்திரத்தை விரும்பி வழங்கவில்லை. அதாவது அரசியல் நெருக்கடியாலேயே சுதந்திரத்தை வழங்கும் முடிவிற்கு ஆங்கிலேயம் தள்ளப்பட்டிருந்தது. அவ்வாறான நெருக்கடியில் பூகோள முக்கியத்துவம் வாய்ந்த புள்ளியில் அமைந்திருக்கும் சிறீலங்காவில் தனது கட்டுப்பாட்டை இழப்பதென்பது ஆங்கிலேயத்திற்கு அவ்வளவு உவப்பானதாக இருக்கவில்லை. எனவே கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரத்தை சிலோனுக்கு வழங்க முயன்ற ஆங்கிலேயத்தின் தந்திரோபாய நகர்விற்கு ஆடக்கூடியவர்களாக சிங்களவர்களையே ஆங்கிலேயம் அடையாளப்படுத்தியது. அதற்கு வலுச்சேர்க்கும் மற்றொரு



விடயமாக இறுதிவரை போரிட்ட கண்டி இராச்சியத்தின் வரலாற்றைத் தெளிவாகப் புரிந்திருந்தது ஆங்கிலேயம். கண்டி இராச்சியத்தைக் காட்டிக் கொடுப்பால் மட்டுமே தாங்கள் அடைந்ததை கணக்கில் எடுத்துக்கொண்ட ஆங்கிலேயம் தமிழ் மன்னான விக்கிரமசிங்கனின் அடங்காப் பற்றை மறந்திருக்கவில்லை.

எனவேதான் ஆங்கிலேயம் தமிழர்களை சுயநிர்ணய உரிமையற்றவர்களாக உருவாக்கிக் கொள்வதைப் பூடகமாகத் தன் சுதந்திரப் பிரகடனத்திற்குள் உள்ளடக்கியது.

இதனை மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் சிலோனின் சுதந்திர தினத்தன்று உச்ச இரகசியமானது என அடையாளமிடப்பட்டு ஆங்கிலேய வான்படைத் தளபதியாலும், பேரரசின் பொதுச் சேவை ஆட் படையணித் தளபதியாலும், கடற்படை உதவித் தளபதியாலும் உருவாக்கப்பட்ட ஆவணமொன்றில் சிலோனின் உள்ளகப் பாதுகாப்பிற்கு சிலோன் அரசாங்கம் பொறுப்பாக இருந்தாலும் கூட எமது கரிசனைக்கு ஆபத்து ஏற்படும் போதிலும், உள்ளக வாரியாக எழும் சவால்களைக் கட்டுப்படுத்தும் வலுவைச் சிலோன் இழக்கும் போதிலும் எமது படையணிகளைக் களத்தில் இறக்கும் உரிமையை நாம் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதுடன், எமது கரிசனையைத்




தக்கவைத்துக் கொள்ளத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் உரிமையையும் எமக்குரித்தானதாக எப்போதும் இருக்கவேண்டும் (உசாத்துணை - பக்கம் 200 - பன்னாட்டுக் குற்றங்கள் - கலாநிதி இராமநாதன் நாகமணி ஸ்ரீஞானேஸ்வரன்) எனத் தெரிவிக்கப்பட்டிருப்பது இங்கு கவனத்திற் கொள்ளத் தக்கது.

ஆகவே என்றென்றைக்கும் தமக்குத் தலையாட்டக் கூடிய அர சொன்றை சிலோனில் நிறுவுவதை ஆங்கிலேயம் விரும்பி வருவதும் அதனைத் தொடர்ந்து கடைப்பிடிக்கப் பல்வேறு தந்திரோபாயங்களை ஆங்கிலேயம் நிகழ்த்துவதையும் நாம் காண்கின்றோம்.

சிறீலங்காவின் உள்ளக வாரியான ஆட்புலக் கட்டுப்பாடு தமிழர்களால் ஆயுத வழியாகத் தகர்த்தழிக்கப்பட்டு, தமக்கான சுயநிர்ணய உரிமையைத் தமிழர்கள் பெற்றுக்கொள்ளும் இறுதி நிலையில் இருந்தபோது இந்த ஆங்கிலேயச் சிந்தனையின் மிகப் பிந்திய வடிவமாக நிகழ்த்தப்பட்டதே 'முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை'.

ஆங்கிலேயம் மேற்குலகமாக மாறி தமிழரின் சுதந்திரப் போரை இனப் படுகொலையின் மூலம் நிறைவுக்குக் கொண்டுவந்தது. ஏனெனில் ஆங்கிலேய நலன்களுக்கு என்றும் சிங்களவர்கள்

> **இருபத்தியோராம் நூற்றாண்டின் இனப்படுகொலை அந்த மண்ணில் உலகத்தின் கண்களுக்கு மறைப்பேதும் இன்றி நிகழ்ந்தது. மக்கள், பொருளாதாரம், படையணி வலு, கட்டமைப்புகள் உட்பட அனைத்தையும் சிதைத்த அந்த இனப்படுகொலை ஈழத் தமிழரின் மண்டியிடாத வீரத்தை மீண்டும் பறைசாற்றியது என்று மட்டும் எண்ணங் கொள்ளக்கூடாது.**

தடையானவர்கள் அல்ல. ஆனால், தமிழர்கள் தமது நலன்களை முன்னிறுத்தியே தம்முடன் சமபந்தியைக் கோருவர் என்பதை ஆங்கிலேயம் கசடறப் புரிந்துள்ளது.

அதனை மீண்டும் புரியவைத்த மற்றொரு நிகழ்வாகவே ஜப்பானியத் தூதுவர் யசூசி அக்காசியை விடுதலைப் புலிகளின் தலைவர் கிளிநொச்சியில் சந்திக்க மறுத்துத் திருப்பியனுப்பிய நிகழ்வை வரலாறு பதிவு செய்துள்ளது. மேற்குலகச் செய்தியுடன் வந்த அக்காசி திரும்பிச்சென்றது மேற்குலகின் நலன்களை முன்னிறுத்தி தமிழர்கள் என்றும் சமரசத்திற்கு வரமாட்டார்கள் என்பதையும், தமது நலன்களை முன்னிறுத்தியே சமரசத்திற்கு வருவார்கள் என்பதையும் மேற்குலகு நன்றாகப் புரிந்து கொள்ள வாய்ப்பாகியது.

இனி அழித்தொழிப்பதைச் செய்வதை விட வேறு வழியில்லை என்பதைப் புரிந்துகொண்ட அனைத்து தரப்புக்களும் ஒரு நேர்கோட்டுக்கு வந்து தமிழர்களின் ஒரே பாதுகாப்பாக இருந்த படையணிகளின் மீது தாக்குதலைத் தொடுத்ததை நாம் அறிவோம். எனினும் பல வருடங்களாக நீடித்த தாக்குதலை முடிவுக்குக்கொண்டு வரவேண்டுமாயின் இனப் படுகொலையைத் தவிர வேறு வழியில்லை என்பது 2009 ஜனவரியில் நிதர்சனமானது.

அந்நிலையில் அந்த இனப் படுகொலையினை எவ்வாறு எதிர்கொள்வது என்பதைத் துல்லியமாகக் கணக்கிட்ட தமிழ்த் தலைமை இனப் படுகொலை நிகழாமல் இனம் அழியுமாயின் என்றென்றைக்கும் விடுதலை சாத்தியமில்லை என்பதைப் புரிந்து கொண்டிருக்கும் என்பதே எனது கணிப்பாக உள்ளது. ஆகவே அந்த இனப் படுகொலையை முறையாக நிறைவேற்றத் தக்க வகையில் உருமறைப்பற்ற வெட்டவெளியாகிய முள்ளிவாய்க்கால் நோக்கி தமிழினம் நகர்த்தப்பட்டது என்பதே எனது முடிவாகவும் உள்ளது.

உருமறைப்பில் நிகழும் இனப் படுகொலையைச் செய்தவர்கள் யார்? என்பதை வென்றவர்களே எழுதுவார்கள். எனவே அதனைச் செய்தவர்களை உலகின் கண்களுக்கு வெளிப்படுத்தும் வகையாகவே வெட்டவெளி நோக்கி நாம் நகர்ந்தோம்.

இருபத்தியோராம் நூற்றாண்டின் இனப்படுகொலை அந்த மண்ணில் உலகத்தின் கண்களுக்கு மறைப்பேதும் இன்றி நிகழ்ந்தது. மக்கள், பொருளாதாரம், படையணி வலு, கட்டமைப்புகள் உட்பட அனைத்தையும் சிதைத்த அந்த இனப்படுகொலை ஈழத் தமிழரின் மண்டியிடாத வீரத்தை மீண்டும் பறைசாற்றியது என்று மட்டும் எண்ணங் கொள்ளக்கூடாது.

அனைத்தும் அழிந்த பின்னரும் கடந்த ஒரு தசாப்த காலமாக தமிழினம் தமது சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைக் கைவிடவில்லை. அதுவே முள்ளிவாய்க்காலில் இருந்து துளிர்த்தலாக தமிழினத்திற்கு மீண்டும் கைகொடுக்கத் தொடங்கியுள்ளது என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

சிறீலங்காவின் புதிய சனாதிபதி ஏன் தமிழர்களின் பிரச்சனையைத் தீர்க்க பேச்சுவார்த்தைகளுக்குத் தான் தயார் என்று தற்போது புதிதாக அறிவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் என்பதை நாம் ஆழமாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

2009 மே மாதத்தில் அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டதாயின் இப்போது பிரச்சனைக்கான தீர்வைப் பற்றிய தேவையை மீணடும் உருவாக்கிய வலு எது? எமது அரசியல் பலமா? அல்லது ஆயுத வலுவா? அல்லது எமது தந்திரோபாயமா? என்று எம்மை நாமே கேட்போமாகில் அதன் விடை இவை எவையும் இல்லை என்று உங்களுக்குப் புரியும். அவ்வாறாயின் எது? அது தான் முள்ளிவாய்க்காலில் அழிந்து நந்திக் கடலில் நிமிர்ந்த எங்களின் அடங்காப் பற்று. இதனைப் புரிந்து கொண்டவர்கள் விடுதலையை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியிருப்பர்.



# ஆழிப்பேரலை சுனாமியில் அழிந்த

ஐங்கரன் விக்கினேஸ்வரா




## ‘ஆச்சே’ தேசத்தின் சுதந்திர கனவு!

**பல** ஆண்டுகளாக ஆச்சே தேசம் விடுதலையை மூச்சாக கொண்டு இந்தோனேசியாவிற்கு எதிராக போராடி வந்தது. ஆழிப் பேரலையின் பாரிய அழிவினால் சர்வதேச மத்தியஸ்தத்துடன் சமாதானத்தை 2005 இல் ஏற்றுக் கொண்டது. விடுதலை வேண்டி போராடி அழிந்த மற்றைய இனங்களுக்கும் ஆச்சே மக்களின் போராட்டம் சான்று பகரும் உதாராணமாக அமைகிறது.

ஆச்சே தேசத்தின் விடுதலைக்கான போராட்டம் 1990களின் இறுதியிலும் 2000 இன் ஆரம்ப காலப்பகுதியிலும் மிகத் தீவிரம் அடைந்திருந்தது. ஆயினும் 2004 டிசம்பர் 26 இல் ஏற்பட்ட ஆழிப்பேரலையின் அழிவுகள் ஆச்சேனியர்களையும் இந்தோனேசியர்களையும் சமாதானத்தை நோக்கி சிந்திக்க வைத்தது.

ஆச்சே மக்கள் சுயநிர்ணய உரிமைக்காகவும் சுதேச அடையாளத்திற்காகவும் சுமார் 29 வருடங்கள் தொடர்ந்து போராடினர். தற்போது இந்தோனேசியாவின் ஆதிக்கத்தில் உள்ளது ஆச்சே (Aceh] மாநிலம். இதன் வடக்குப் பகுதியிலே சுமத்திரா தீவும் தெற்குப் பகுதியிலே இந்து சமுத்திரமும் அமையப் பெற்றுள்ளன.

கொடிய போரினால் சிந்திய குருதிகளுக்கும், சிதைவடைந்த தேசத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்தது 2004 இந்தியப் பெருங்கடல் ஆழிப்பேரலை. சுனாமியின் அழிவுகளும் ஆச்சே விடுதலைக்கான ஆயுத போராட்டத்தை நிறுத்த வழிகோலியது என்பது உண்மையே.

### சுதந்திர ஆச்சே இயக்கம்:

1976 மற்றும் 2005 க்கு இடையில் சுதந்திர ஆச்சே இயக்கம் &Free Aceh Movement & AÀ»x GAM & Gerakan Aceh Merdeka ஆச்சே மாகாணத்தை சுதந்திரமாக மாற்றும் குறிக்கோளுடன் போராடியது.

2003 இல் இந்தோனேசியாவின் ஒரு பாரிய இராணுவ தாக்குதல் நடவடிக்கையும், பின்னர் 2004 இந்தியப் பெருங்கடல் ஆழிப்பேரலை சுனாமியின் அழிவுகளும், ஆச்சே விடுதலைக்கான ஆயுத போராட்டத்தை நிறுத்தியதாக அறிவித்தது. அதன்பின் ஹெல்சிங்கி அமைதி உடன்படிக்கையைக் கொண்டு வந்ததன் மூலம் ஆயுதப் போராட்டம் முழுமையாக முடிவுற்றது.

ஆச்சே மாநிலம் இந்தோனேசியாவின் மற்ற பகுதிகளுக்கு இடையே கலாசார, மத வேறுபாடு உள்ளது. பெரும்பாலான இந்தோனேசியாவில் நடைமுறையில் உள்ள இஸ்லாத்தின் மிகவும் பழமைவாத வடிவமானது ஆச்சேவிலும் பரவலாக நடைமுறையில் உள்ளது.





# 'ஆச்சே' தேசத்தின் சுதந்திர கனவு!

முன்னால் அதிபர் சுஹார்டோவின் 1965-1998 ஆட்சியில் பரந்த தேசிய வாத கொள்கைகள் குறிப்பாக ஆச்சேவில் பிரபலமடையவில்லை. அங்கு ஒருங்கிணைக்கப்பட்ட 'இந்தோனேசிய கலாச்சாரத்தை' ஊக்குவிக்கும் மத்திய அரசின் கொள்கையால் பலர் வெறுப்படைந்தனர்.

ஜகார்த்தாவில் உள்ள தலைவர்கள் ஆச்சேவின் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளவில்லை. அத்துடன் ஆச்சேவின் உள்ளூர் தேவைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் குறித்து சிறிதளவு அனுதாபம் கூடக் காட்டவில்லை என்ற பரவலான உணர்வு இந்த மாகாணத்தில் உள்ளது.

## ஆதிக்க தேசிய மையவாதம்:

சுஹார்டோ அரசாங்கத்தின் ஆதிக்க தேசிய மையவாதப் போக்குகளை எதிர்த்து, 4 டிசம்பர் 1976 இல் சுதந்திர ஆச்சே இயக்கத்தை உருவாக்கி, சுதந்திரத்தை அறிவிக்க வழிவகுத்தது. 'நவ-காலனித்துவ' அரசாங்கத்திடமிருந்து மதம் மற்றும் கலாச்சாரம் ஆச்சேவிற்குள் அதிகரித்து வரும் ஜாவானிய குடியேற்றங்களின் முக்கிய அச்சுறுத்தல்களாகின.ஆச்சேவின் கனிசமான இயற்கை வளங்களில் இருந்து கிடைக்கும் வருமானத்தின் நியாயமற்ற விநியோகம் சர்ச்சைக்குரிய மற்றொரு விடயமாக இருந்தது.

1979 ஆம் ஆண்டின் இறுதியில், இந்தோனேசிய இராணுவ ஒடுக்குமுறை நடவடிக்கைகள் ஆச்சே இயக்கத்தை நசுக்கத் தொடங்கின. அதன் பல தலைவர்கள் நாடுகடத்தப்பட்டனர், பல நூறு பேர் சிறையில் அடைக்கப்பட்டுக் கொல்லப்பட்டனர். அத்துடன் சுதந்திர ஆச்சே இயக்கத்தை பின்பற்றுபவர்கள் சிதறடிக்கப்பட்டு நிலத்தடி சிறைக்கு தள்ளப்பட்டனர்.

## லிபியகடாபியின் ஆதரவு:

1985 இல், ஆச்சே இயக்கத்திற்கு லிபிய ஆதரவு கிடைக்கப் பெற்றது. ஏகாதிபத்தியம், இனவாதம், சியோனிசம் மற்றும் பாசிசத்திற்கு எதிரான தேசியவாத போராட்டங்களை ஆதரிக்கும் கேணல் கடாபியின் உதவிகளை இவர்களும் பயன்படுத்திக் கொண்டனர். லிபியா பின்னர் ஆச்சே இயக்கத்துக்கு தொடர்ந்து நிதியளித்ததா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

ஆயினும் ஆச்சே இயக்கம்ஆட்சேர்ப்பு செய்பவர்களுக்கும், மிகவும் தேவையான இராணுவப் பயிற்சியைப் பெறக் கூடிய ஒரு சரணாலயமாக லிபியா விளங்கியது.

1986 முதல் 1990 வரையிலான காலகட்டத்தில் லிபியாவால் பயிற்சி பெற்ற போராளிகளின் எண்ணிக்கை சுமார் 1,000 முதல் 2,000 பேர் இருந்ததாகக் கூறினர். அதே சமயம் இந்தோனேசிய இராணுவத்தின் அறிக்கையில் படி 600 முதல் 800 வரை இருப்பதாகக் கூறினர். 1989 மற்றும் 1998 க்கு இடைப்பட்ட காலகட்டம் இந்தோனேசிய இராணுவத்தின் கொடூரமான நடவடிக்கை சகாப்தம் என அறியப்பட்டது.

ஏனெனில் இந்தோனேசிய இராணுவம் அதன் கிளர்ச்சி-எதிர்ப்பு நடவடிக்கைகளை தீவிரமாக முடுக்கி விட்டது. இந்த நடவடிக்கையால் ஒரு கொரில்லாப் படையான ஆச்சே இயக்கத்தை அழிப்பதில் தந்திரோபாயமாக வெற்றி பெற்றாலும், 1998 இன் பிற்பகுதியில் ஜனாதிபதி ஹபிபியின் உத்தரவின்படி இந்தோனேசிய இராணுவம் ஆச்சேவிலிருந்து கிட்டத்தட்ட முழுவதுமாக திரும்பப் பெறப்பட்டது. இதன் பின்னர் ஆச்சே இயக்கம் தன்னை மீண்டும் நிலைநிறுத்த உதவியது. ஆயினும் முக்கியமான ஆச்சே இயக்க தளபதிகள் பலர் கொல்லப்பட்டனர்.

## சுஹார்டோவின் வீழ்ச்சி:

1999 ஆம் ஆண்டில், ஜாவாவில் ஏற்பட்ட குழப்பம் மற்றும் சுஹார்டோவின் வீழ்ச்சியால் ஒரு பலமற்ற மத்திய அரசாங்கம் சுதந்திர ஆச்சே இயக்கத்திற்கு ஒரு நன்மையை அளித்தது எனலாம். 1999 இல் துருப்புக்கள் திரும்பப் பெறப்படும் என்று அறிவிக்கப்பட்ட போதிலும், மோசமான பாதுகாப்பு நிலைமையால் மேலும் வீரர்களை மீண்டும் களத்தில் இறக்க வழிவகுத்தது. ஜனாதிபதி மேகாவதி சுகர்னோ புத்ரியின் பதவிக் காலத்தில் 2001-2004 துருப்புக்களின் எண்ணிக்கை 15,000 ஆக உயர்ந்ததாக நம்பப்படுகிறது.

அச்சேவில் இந்தோனேசிய தாக்குதல் மே 19, 2003 இல் தொடங்கப்பட்டது, கிட்டத்தட்ட ஒரு வருடம் நீடித்தது. 1975 ஆம் ஆண்டு கிழக்கு திமோர் படையெடுப்பிற்குப் பிறகு இந்தோனேசிய இராணுவத்தின் மிகப்பெரிய தாக்குதலில் இதுவும் ஒன்றாகும். இது ஆச்சே இயக்கத்தை கடுமையாக முடக்கியது. ஆயினும் ஆச்சே முழுவதிலும் உள்ள கிராமப் புறங்களில் 70 சதவீதத்தை ஆச்சே இயக்கம் கட்டுப்படுத்த முடிந்தது.

1999 ஆம் ஆண்டு இந்தோனேசிய அரசாங்கத்திற்கும் ஆச்சே இயக்கத்துக்கும் இடையிலான முதல் பேச்சுவார்த்தை தொடங்கியது. இந்த செயல்முறையானது மனிதாபிமான உரையாடல் மையம் என்ற ஒரு தனியார் இராஜதந்திர அமைப்பால் தொடங்கப்பட்டது,

இது 2003 வரை இரு தரப்புக்கும் இடையே அமைதிப் பேச்சுக்களை நடாத்த எளிதாக்கியது. 2001 மற்றும் 2002



இல் நடந்த இந்தோனேசிய பாதுகாப்பு படையின் அடக்குமுறைகளால் பல ஆயிரம் பொதுமக்கள் இறந்தனர். இம்மோதல்களால் 15,000 பேர் வரை கொல்லப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தோனேசிய ஆட்சியின் கீழ் சிறப்பு சுயாட்சியை ஏற்றுக்கொள்வதற்கு ஆச்சே இயக்கத்துக்கு இறுதி எச்சரிக்கையையும் அக்காலத்தில் விடுக்கப்பட்டது.

## ஆச்சேயில் கொடூர இராணுவச் சட்டம்:

மே 18, 2003 அன்று நள்ளிரவுக்குப் பிறகு, ஜனாதிபதி மேகாவதி சுகர்னோபுத்ரி, 12வது இந்தோனேசிய இராணுவத் தலைவரான ஜெனரல் எண்ட்ரியார்டோனோ சுதார்டோவுக்கு பிரிவினைவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்க அனுமதி வழங்கினார். ஜெனரல் சுதார்டோ ஆச்சேயில் இராணுவச் சட்டத்தை விதித்தார். ஜூன் 2003 இல், ஆச்சேவில் உள்ள அனைத்து மக்களையும் வேறுபடுத்துவதற்காக ஒரு



# 'ஆச்சே' தேசத்தின் சுதந்திர கனவு!

புதிய அடையாள அட்டையை அறிவித்தது. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் உதவி நிறுவனங்களுக்கு நடவடிக்கைகளை நிறுத்தவும், அப்பகுதியை விட்டு வெளியேறவும் உத்தரவிடப்பட்டது.

இந்தோனேசிய இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தன. போரின் போது 2,000 பேர் கொல்லப்பட்டதாக முதலில் மதிப்பிடப்பட்டது. ஆனால் சர்வதேச மனித உரிமை குழுக்கள் மற்றும் அரச சார்பற்ற மனித உரிமைகள் ஆணையம் பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் பொதுமக்கள் பல்லாயிரம் என்று கூறினர்.

## இந்தோனேசிய இராணுவ படையெடுப்பு:

நவம்பர் 2003 இல் இராணுவச் சட்டம் மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. மனித உரிமைகள் கண்காணிப்பு அறிக்கையின்படி, இந்தோனேசிய இராணுவம் படையெடுப்பு மற்றும் ஆக்கிரமிப்பின் போது பரவலான மனித உரிமை மீறல்களைச் செய்தது. இராணுவச் சட்டத்தின் முதல் ஏழு மாதங்களில் 100,000 க்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்தனர் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் நடந்ததாக அறிவித்தனர்.

இந்த இராணுவ நடவடிக்கையின் போது பரவலான பாலியல் துஷ்பிரயோகங்கள் நடந்ததாக மலேசியாவில் உள்ள ஆச்சே அகதிகள் தெரிவித்தனர். இந்தோனேசிய இராணுவத்தின் உறுப்பினர்கள் கடினமான விசாரணைகளும் , கொடூரமான சித்ரவதைகளையும் மேற்கொண்டதாக கருதப்படுகிறது.

இதன்பின் இந்தோனேசிய அரசாங்கம் பாரிய தாக்குதலைத் தொடங்கி ஆச்சே மாகாணத்தில் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியது. இந்த காலகட்டத்தில், ஆச்சே இயக்கம் கடுமையாக முடக்கப்பட்டது, அதன் தளபதி அப்துல்லா சியாஃபி அரசாங்கத்தால் பதுங்கியிருந்து கொல்லப்பட்டார், அதே நேரத்தில் டெங்கு ஜமைக்கா மற்றும் இஷாக் டாட் போன்ற பல்வேறு பிராந்திய தளபதிகளும் கொல்லப்பட்டனர்.

## டோக்கியோ அமைதிப் பேச்சு:

இந்தோனேசிய அரசாங்கத்தால் ஆச்சே இயக்கம் சண்டையை முடிவுக்குக் கொண்டு வரவும், இரண்டு வாரங்களுக்குள் ஆச்சேவுக்கு சிறப்பு சுயாட்சியை ஏற்கவும் ஒரு இறுதி எச்சரிக்கையை வெளியிட்டது.

ஸ்வீடனை தளமாகக் கொண்ட ஆச்சே இயக்கத்தின் ஆச்சே இயக்க தலைவர்கள் இறுதி எச்சரிக்கையை ஏற்க மறுத்தனர். ஆனால் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆயுத மோதலைத் தவிர்க்கவும், டோக்கியோவில் அமைதிப் பேச்சுக்களை மீண்டும் தொடங்கவும் இரு தரப்பையும் வலியுறுத்தின.

மே 16, 2003 அன்று, அரசாங்கம் தன்னாட்சி வழங்குவதே ஆச்சே இயக்கத்துக்கு அளிக்கும் இறுதி சலுகை என்றும், இறுதி எச்சரிக்கையை நிராகரிப்பது இயக்கத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் என்றும் கூறியது. ஆச்சே இயக்க தலைவர்கள் மற்றும் பேச்சுவார்த்தையாளர்கள் இந்தக் கோரிக்கைக்கு பதிலளித்தனர்.

## சுனாமி 2004 பேரழிவு:

ஆச்சே இயக்க அறிக்கைகளின் மூலம், 2003–2005 அரசாங்கத் தாக்குதலின் போது அதன் இயக்க வலிமையில் 50% இழந்தது என ஒப்புக்கொண்டது. 2004 ஆம் ஆண்டு சுனாமி பேரழிவு ஆச்சே மாகாணத்தை தாக்கியபோதும் கிளர்ச்சி தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

டிசம்பர் 2004 இல் பேரழிவை ஏற்படுத்திய சுனாமிக்குப் பிறகு, ஆச்சே இயக்கம் ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தத்தை அறிவித்தது, சர்வதேச சமூகத்தின் உறுப்பினர்கள் மோதலைத் தீர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

சுனாமிக்குப் பிறகு, இந்தோனேசிய அரசாங்கம் ஆச்சே பகுதியை சர்வதேச நிவாரண முயற்சிகளுக்குத் திறந்தது. சுனாமியின் பின்னர் இவ் மோதல் சர்வதேச கவனத்தை ஈர்த்தது. முந்தைய சமாதான முயற்சிகள் பலவும் தோல்வியடைந்தன, ஆனால் சுனாமியின் பின் இரு தரப்பும் மோதலில் இராணுவ ரீதியாக வெற்றிபெற இயலாமை மற்றும், குறிப்பாக, இந்தோனேசியாவில் அமைதியைப் பாதுகாக்க ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுதோயோனோவின் விருப்பம் உட்பட






பல காரணங்களால், ஒரு சமாதான உடன்படிக்கை எட்டப்பட்டது. இதன் மூலம் 2004 இந்தியப் பெருங்கடல் பூகம்பத்தின் விளைவுடன் ஆச்சேயில் 30 ஆண்டுகால மோதலை முடிவுக்குக் கொண்டு வந்தது.

### பின்லாந்து சமாதானப் பேச்சுவார்த்தை:

29 வருட போருக்குப் பிறகு 2005. சுஹார்டோவிற்குப் பிந்தைய இந்தோனேசியா மற்றும் தாராளவாத–ஜனநாயக சீர்திருத்த காலம் ஆகும். அத்துடன் இந்தோனேசிய இராணுவத்தில் பதவி மாற்றங்கள் சமாதானப் பேச்சுக்களுக்கு மிகவும் சாதகமான சூழலை உருவாக்க உதவியது. புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி சுசிலோ பாம்பாங் யுதோயோனோ மற்றும் துணைத் தலைவர் ஜூசுஃப் கல்லா ஆகியோரின் அமைதி தீர்வுக்கான பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கவை.

அதே நேரத்தில், ஆச்சே இயக்க தலைமை தனக்கு கிடைக்கக்கூடிய விருப்பங்களை மறுபரிசீலனை செய்தது, மேலும் இந்தோனேசிய இராணுவம் கிளர்ச்சி இயக்கத்தை கணிசமான அழுத்தத்திற்கு உட்படுத்தியது, இது ஆச்சே இயக்கம் முழு சுதந்திரம் இல்லாத முடிவை ஏற்றுக்கொள்ள ஊக்கப்படுத்தியது.

முன்னாள் பின்லாந்து ஜனாதிபதி மார்ட்டி அஹ்திசாரி தலைமையில், நெருக்கடி மேலாண்மை முன்முயற்சியால் சமாதானப் பேச்சுக்கள் எளிதாக்கப்பட்டன. இதன் விளைவாக அமைதி ஒப்பந்தம் 15 ஆகஸ்ட் 2005 அன்று கையொப்பமிடப்பட்டது. ஒப்பந்தத்தின் கீழ், இந்தோனேசியா குடியரசின் கீழ் ஆச்சே சிறப்பு சுயாட்சியைப் பெறுவார்கள் என அறிவிக்கப்பட்டது.

### ஹெல்சின்கி புரிந்துணர்வு ஒப்பந்தம்:

ஹெல்சின்கி அமைதி புரிந்துணர்வு ஒப்பந்த முடிவுகளால் மோதலுக்கு அமைதியான தீர்வு கிடைத்ததாக அறிவித்தனர். இதன்படி ஆச்சேவுக்கு சிறப்பு சுயாட்சி வழங்கப்பட்டது. ஆச்சே இயக்கத்தின் நிராயுதபாணியாக்கமும், ஆச்சே இயக்கத்தின் சுதந்திரக் கோரிக்கையும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அத்துடன் அவசியமற்ற இந்தோனேசிய துருப்புக்கள் வெளியேற்றப்பட்டனர். இதன்பின் அமைதிக்கான ஆச்சே கண்காணிப்பு பணியகத்தால் பிராந்திய தேர்தல்களும் நடாத்தப்பட்டது.

பல ஆண்டுகளாக விடுதலையை மூச்சாக கொண்டு போராடி ஆச்சே தேசம் , கொடிய போரினால் சிந்திய குருதிகளுக்கும், சிதைவடைந்த தேசத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்க 2004 இந்தியப் பெருங்கடல் ஆழிப்பேரலை சுனாமியின் அழிவுகளும், ஆச்சே விடுதலைக்கான ஆயுத போராட்டத்தை நிறுத்த வழிகோலியது என்பது உண்மையே.

ஆழிப் பேரலையின் பாரிய அழிவினால் சர்வதேச மத்தியஸ்த்துடன் சமாதானத்தை ஏற்றுக் கொண்ட அச்சே தேச வரலாறு, விடுதலை வேண்டி போராடி அழிந்த மற்றய இனங்களுக்கும் சான்று பகரும் உதாராணமாக அமைகிறது எனலாம்.

## தமிழ் மொழியின் சிறப்புகளில் சில:-



** சீனப் பெருஞ்சுவரில் நுழை வாயிலில் 'பாளையகரர்கள் நுழை வாயில்' என்று தமிழில்எழுதபட்டிருக்கும்.*

** கனடா பாராளுமன்றத்தில் தமிழ்மொழியில் பாராளுமன்றம் என்பது பொறிக்கபட்டிருக்கும்.*



** உயரமான நயாகரா நீர் வீழ்ச்சியில் தமிழ்மொழியில் நீர் வீழ்ச்யின் பெயர் இடம் பெற்று இருக்கும்..*



** ரஷ்ய அதிபர் மாளிகையில் தமிழ் மொழியிலும் மாளிகையின் பெயர் பொறிக்கபட்டுள்ளது*

** உலகில் பைபிளுக்கு அடுத்தபடியாக அதிகமாகமொழி பெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள்..*



# ஒரு சாதனைப் பெண்ணின் கதை!!

## சேலையுடன் இந்தியாவின் முதல் பெண் விமானி

16 வயதில் திருமண பந்தத்தில் இணைந்து 24 வயதில் இரண்டு பிள்ளைகளுடன் கணவனை இழந்த சார்லா தாக்ரால் (Sarla Thakral) பற்றிய சுவாரசியமான தகவல் களையே நாம் உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

இந்தியாவில் விமானம் செலுத்துவதற்கான அனுமதி பத்திரம் பெற்றுக்கொண்ட முதல் பெண்மணியாக சார்லா கருதப்படுகின் றார். 1914 ஆம் ஆண்டு டெல்லியில் பிறந்த சார்லா, 1936 ஆம் ஆண்டு தனது 21 ஆம் வயதில் விமானி அனுமதி பத்திரத்தை பெற்றுக் கொண்டார். அந்தக் காலப் பகுதியானது விமானத்தில் பயணம் செய்வது என்பதே ஆச்சரியத்திற்குரிய காலம் என்பது குறிப்பிடத்தக்கது.





ஆயிரம் மணித்தியாலங்கள் வானில் பறந்து A தர சான்றிதழை பெற்றுக் கொண்ட சார்லா B தர சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கும் முயற்சி எடுத்து வந்தார். இந்த B தர சான்றிதழ் இருந்தால் மட்டுமே வர்த்தக விமானங்களைச் செலுத்த முடியும்.

சார்லா முதல் தடவையாக விமானத்தில் பயணித்த போது திருமணம் முடித்து இருந்தார் என்பது மட்டுமல்லாமல், நான்கு வயதான சிறுமிக்குத் தாய் என்பதும் குறிப்பிடத் தக்கது.

முதல் தடவையாக விமானத்தில் விமானியாக பயணித்த போது சேலை அணிந்து சார்லா கடமையில் ஈடுபட்டிருந் தார். விமானத்தின் கட்டுப்பாட்டு அறையில் அந்தக் காலப் பகுதியில் ஆண்கள் மட்டுமே பணியாற்றி வந்திருந்தனர்.

ஒவ்வொரு ஆணின் வெற்றியின் பின்னணியிலும் பெண் ஒருவர் இருக்கின்றார் என்பது போன்று சார்லாவின் வாழ்க்கையிலும், வெற்றியின் பின்னாலும் இரண்டு ஆண் கள் இருந்துள்ளனர். அவரின் கணவர் மற்றும் கணவரின் தந்தை ஆகியோரே அவரது வெற்றியின் பின்னணியில் இருந்தவர்கள் ஆவர்.

சார்லாவின் கணவர் ஷர்மாவின் குடும்பத்தில் ஒன்பது பேர் விமானிகள் இருந்தார்கள். அவரது இந்த குடும்பப் பின்ன ணியும் சார்லா விமானி ஆவதற்கு அல்லது விமானியாகும் கனவைப் பூர்த்தி செய்வதற்கு உந்து சக்தியாக அமைந்தது எனலாம்.

சார்லாவின் கணவர் ஷர்மாவும் ஒரு வெற்றிகரமான விமானி ஆவார், ஷர்மா எயார் மேல் விமான அனுமதி பத்திரம் பெற்றுக் கொண்ட முதலாவது இந்தியர் என்பதுடன் கராச்சி – லாகூர் நகரங்களுக்கிடையில் அவர் விமானத்தைச் செலுத்தி இருந் தார்.

எனினும், ஒவ்வொரு வெற்றிக் கதையின் பின்னாலும் காணப்படும் சவால்கள் சார்லாவின் வாழ்க்கையிலும் காணப் பட்டது. 1939 ஆம் ஆண்டு இடம் பெற்ற திடீர் விமான விபத் தில் தனது கணவரை இழந்தார் அவர். மிக இளம் வயதில் (24 வயதில்) சார்லா தன் கணவனை இழந்துவிட்டார்.

ஆயிரம் மணித்தியாலங்கள் வானில் பறந்து A தர சான்றி தழை பெற்றுக் கொண்ட சார்லா B தர சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கும் முயற்சி எடுத்து வந்தார். இந்த B தர சான்றி தழ் இருந்தால் மட்டுமே வர்த்தக விமானங்களைச் செலுத்த முடியும்.

எனினும், இந்த கனவை நினைவாக்கிக் கொள்வதில் ஏகப் பட்ட சவால்கள் ஏற்பட்டன. குறிப்பாக இரண்டாம் உலகப்போர் காரணமாக சார்லா காத்திருக்க நேரிட்டது. போர் ஆரம்பித்த கார ணத்தினால் சார்லா, லாகூருக்கு திரும்பி மாயோ கலைக் கல் லூரியின் டிப்ளமோ கற்கை நெறி ஒன்றைப் பூர்த்தி செய்தார்.

ஆர்ய சமூகத்தை பின்பற்றிய சார்லா, பீ.பீ. தாக்ரால் என்ப வரை இரண்டாம் திருமணம் செய்து கொண்டார்.




ஆபரண உற்பத்தி, சேலை வடிவமைப்பு உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் கற்றுத் தேர்ந்து பல வெற்றிகளைப் படைத் துள்ளார் சார்லா. பெண்கள் அனைவருக்கும் முன்னுதாரண மாக திகழ்ந்த சார்லா 2009ம் ஆண்டு மார்ச் மாதம் இயற்கை எய்தினார்.

# ஆரோக்கிய வாழ்வே எமது அசையாத சொத்து





மிதயா கானவி

நலவாழ்வு என்பது நோயின்மையும், நலிவற்ற நிலையும் மட்டுமின்றி முழுமையான உடல், உள, சமுக நன்னிலையில் வாழ்தல் ஆகும். இத்தகைய நலவாழ்வு சமூகத்தின் பல்வேறு காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றது. உணவு, உடற்பயிற்சி, கல்வி, உறவுகள், சமுகத்தொடர்புகள், மருத்துவ சேவை, ஆன்மிகம், பண்பாடு,, பழக்க வழக்கங்கள் போன்றவை அவற்றின் முக்கிய அம்சங்களாகும்.

எனவே நலவாழ்வு என்பதை நோயும், அதற்கான தீர்வும் என்று குறுகிய வட்டத்திற்குள் வரையறுக்க முடியாது.

இன்றைய சிறார்களே நாளைய சமூகத்தின் தூண்கள். எனவே, அவர்களின் உடல், உள ஆரோக்கியம் குறித்து அதிக அக்கறை செலுத்த வேண்டியதும் அவசியம்.

பிள்ளைகள் பெற்றோர்கள் சொல்வதை கேட்டு வளர்வதைவிட அவர்களைப் பார்த்து வளர்வதே அதிகம். எனவே, நோயற்ற ஆரோக்கியமான சமுகத்தை உருவாக்க வேண்டும் எனில் எமது உணவு முறை, உடற்பயிற்சி, ஓய்வு, என்பவற்றைக் கவனத்திற் கொண்டு அவர்களை வழிநடத்த வேண்டியது அவசியம்.

எமது வாழ்வியல் முறைகளே நலவாழ்வின் தொடக்கப்புள்ளி எனலாம். தொழில்நுட்பமும் விஞ்ஞானமும் வளர்ந்துள்ள இக் காலத்தில் எமது உடல், உள நலத்திற்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கின்றோமா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

உணவு மற்றும் வாழ்வியல் மாற்றங்களால் தொற்றும் , தொற்றா நோய்களால் பாதிக்கப்படுவர்கள் பெருகிச் செல்கின்றார்கள்.

குறிப்பாக புலத்தில் வாழும் எமது தமிழ்ச் சமூகம் ஓய்வில்லாமல் ஓடிக் கொண்டேயிருக்கின்றது என்ற





# ஆரோக்கிய வாழ்வே எமது அசையாத சொத்து

கசப்பான உண்மையை நாம் உணர்ந்தாக வேண்டும்.

சமுகத்துடன் சேர்ந்து வாழாது தனித்து நிற்பது கூட எம்மை அறியாமல் ஏதோ ஒரு வழியில் ஆரோக்கியத்தை பாதிக்கத்தான் செய்கின்றது.

ஆன்மிக வழிபாடுகள் எமது உள ஆரோக்கியத்திற்கு நன்மை பயக்கின்றது என்று தற்கால விஞ்ஞானமும் கூறுகின்றது.

ஆன்மிகத்தில் ஈடுபாடு உள்ளவர்கள் தமக்கு ஏற்படும் துன்ப நிகழ்வுகளில் இருந்தும் விரைவில் மீண்டு விடுவார்கள் என்று சமீபத்திய ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன.

எமது ஆரோக்கியத்தை எவ்வளவு பணம் கொடுத்தும் வாங்க முடியாது, எமக்கான ஓய்வை நாமே தான் தீர்மானிக்க வேண்டும். முறையான தூக்கம் எமது ஆரோக்கியத்தில் பெரும் பங்கு வகிக்கின்றது,

'முறையான தூக்கமே ஆரோக்கியத்தின் மூன்றாவது தூண்.'

சமச்சீர் உணவை உண்ணப் பழகிக் கொள்வதுடன் நாளாந்தம் உடற்பயிற்சி செய்யவதற்கும் நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும். உடற்பயிற்சி என்பது நோய்வாய்ப்பட்டவர்களுக்கும், உடற்பருமன் உடையவர்களுக்கு மட்டுமே அவசியமானது என்ற பிழையான கருத்து பலரிடம் நிலவுகின்றது. இதனைக் களைந்து ஒவ்வொரு மனிதனும் தன்னை நோய் வருமுன் காப்பதற்கும் உடல், உள ஆரோக்கியத்தை பேணவும் உடற்பயிற்சி அவசியமாகின்றது என்ற உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்.



மனித வாழ்வில் எல்லாம் இருந்தும் மகிழ்ச்சி இல்லை எனில் பயனில்லை என்பதை கொரோனா பேரிடர் காலத்தில் கண்ணூடு கண்டவர்கள் நாங்கள். மகிழ்ச்சியின் அத்திவாரமே ஆரோக்கியம் தான் என்பதை அந்தப் பேரிடர் எமக்கு உணர்த்தி இருக்கின்றது.

ஆரோக்கியம் எனும் போது அக, புற ஆரோக்கியங்கள் இரண்டும் கவனிக்கப்பட வேண்டும். ஒன்றை விட்டு ஒன்றில்லை எனும் புரிதல் இங்கே அவசியம். உள நலன் கெட்டால் உடல் நலனும் கெடும். உடல் நலன் கெட்டால் உளநலனும் கெடும். இதுதான் உண்மை.

உலகம் முழுவதும் மக்களிடம் ஏற்பட்டிருக்கும் தவறான உணவுப்பழக்கத்தால் இதய நோய்களினால் அவதிப்படுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்திருந்தது.

இதயக் கோளாறினால் ஏற்படும் மரணங்களை தவிர்க்கும் நோக்கில் 2023 இல் 'ஊடுகொழுப்பு' (Trans fat ) இல்லாத உலகம் வேண்டும் என்ற கருதுகோளின் அடிப்படையில் REPLACE – 'பதிலீடு' என்னும் பெயரில் ஒரு மாற்றுத் திட்டத்தையும் அறிவித்திருந்தது.

சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும் என்ற பழமொழிக்கு ஏற்ப நோயற்ற ஆரோக்கியமான உடல் இருந்தால் தான் வாழ்வின் எந்த சவாலையும் நாம் எதிர்கொண்டு நிற்க முடியும் என்பதை உணர்ந்து நாம் செயற்பட வேண்டும்.

'ஆரோக்கிய வாழ்வே எமது அசையாத சொத்து.'

முல்லை பாஸ்கர்

# மனிதம் மலரட்டும்!!



மனிதம் மலரட்டும்!
வாழும் சில காலம்
வாழ வைப்போம்
சிலரையாவது!

நீங்கள் சிந்தும்
வியர்வையாலே
சிலிர்த்தெழட்டும்
சின்னஞ்சிறு செடிகள்!

மொட்டுகளைக் கட்டி விடும்
கயிறாய் இல்லாமல்.
கட்டவிழ்த்து மணம் பரப்பும்
காற்றாய் இருப்போம்!

விதைத்த விதைகள்
எல்லாம் விருட்சம்
ஆவதில்லை.!
முளைக்காத விதைகள் கூட
உரம் ஆவதுண்டு!

பிறந்தோம் பிணமானோம்
என்றில்லாமல்..
நாமும் வாழ்ந்து
பிறரையும் வாழ்விப்போம்!

கொத்தாதவற்றை
பாம்பாக மதிப்பதில்லை!
மணக்காத மலரை
பூக்களாய் ஏற்பதில்லை!
தீ தீயாகஇல்லாவிட்டால்
சின்ன விட்டில்பூச்சிகள் கூட
எச்சில் துப்பி செல்லும்!

மனிதா!
மனிதத்தை மறந்து விடாதே!
மண்ணுக்குள் புதையும் முன்
வீட்டுக்கும், நாட்டுக்கும்
நம்மால் முடிந்த
நல்லவற்றை
பிறர்க்கு செய்வோம்!
நம் பெயரை இவ்வுலகில்
நினைக்க. நிலைக்கச் செய்வோம்....



# சீரழியும் இளைய தலைமுறையின் உண்மைக்கதை

**நான்** எனது மேல் படிப்புக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடமை புரியும் போது நடந்த சம்பவம் இது.

எனது வாட் ரவுன்ட்டில் நோயாளிகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது எனது தொலைபேசி சிணுங்கியது. எப்போதும் பரபரப்பாகவே காணப்படும் அவசர சிகிச்சைப்பிரிவிலிருந்து (ETU) வந்த அழைப்பு அது. சேர்..! அவசரமாக வாருங்கள். 18 வயதுடைய பெண் ஒருவர் மிக மோசமான நிலையில் உயிருக்கு போராடிக் கொண்டு இருக்கிறார் என மறுமுனையில் வைத்தியர் தெரிவித்தார்.

நானும் 'என்ன பிரச்சினையோ தெரியல்ல. அவசரமா போவம், வந்து மத்த ஆக்களப் பாக்கிரன்' என சக வைத்தியர்களிடம் சொல்லிவிட்டு மின்னல் வேகத்தில் அவசர சிகிச்சைப் பிரிவை நோக்கி ஓடினேன்.

ETU க்கு வெளியே பெரிய ஒரு கூட்டம் அழுகையுடனும் கவலை தோய்ந்த முகத்துடனும் நின்று கொண்டிருந்தார்கள். அவசரமாக எல்லோரையும் விலக்கிக் கொண்டு ETU க்கு உள்ளே போனேன். என்னைக் கண்டதும் அவசர சிகிச்சைப் பிரிவிற்கான வைத்தியர் என்னிடம் குறித்த நோயாளியைப் பற்றிக் கூற ஆரம்பித்தார்.

> எனது மகள் உயிரோடு இருப்பதை விட மரணிப்பதே நல்லது ;
> **இது ஒரு பெற்றோரின் குமுறல்**

இந்தப் பெண் பிள்ளைக்கு 18 வயசு, நேத்து இரவு வெளிய போய் வந்த பிறகு கொஞ்சம் வித்தியாசமாக இருந்திருக்கிறார். இரவு படுத்த பிள்ளை இன்னும் எழும்பல்ல என்று பெற்றோர் சொல்கிறார்கள். ஹொஸ்பிடலுக்கு வர முதல் பிட்ஸ் (fits) ஏற்பட்டு கை கால் அடித்ததாகவும், வாயால் நுரை வந்ததாகவும் சொன்னார்கள் என அவர் தெரிவித்தார்.

எதன் காரணமாக இந்த நிலை ஏற்பட்டிருக்கும் என்ற எண்ணத்துடன் அந்த நோயாளியைப் பரிசோதிக்க ஆரம்பித்தேன்.

மெலிந்த தோற்றமுடைய, தலைமுடியை பல நிறங்களால் டை (dye) பண்ணிய, கண் புருவங்களை வெட்டிய, மொடர்னான அந்த பெண் முற்றாக உணர்வற்றவராக கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தார். பெயர் சொல்லும் போதோ, தட்டி எழுப்பும் போதோ எந்த வித அசைவுமில்லாத ஆழ்ந்த உறக்கம் அது.

மேலும், மிக உக்கிரமான காய்ச்சல் காய்ந்து கொண்டிருந்தது, அதனோடு சேர்த்து வியர்வையால் உடல் முழுக்க நனைந்து இருந்தது. '105 டிகிரி பரனைட் டெம்பரேச்சர் டொக்டர்' என மிஸ் சொன்னார்.

பல்ஸ் ரேட் (இதயத்துடிப்பு) 150 என ஈசிஜி (E-C-G) மெசின் காட்டிக் கொண்டிருந்தது. (ஒரு சாதாரண மனிதனின் இதயத்துடிப்பு 60-100 வரை ஓய்வில் இருக்கும் போது மாறுபடலாம்).

வயிற்றைப் பரிசோதிக்கும் போது அடிவயிறு பெரிதாகவும், அந்த இடத்தைத் தொடும் போது சிறியதொரு முனகல் சத்தமும் கேட்டது. இது யூரினரி ரிடன்சன் (urinary retention - சிறுநீர் வெளியேறாததன் காரணமாக சிறுநீர்ப்பை வீங்கியுள்ளது) என மிஸ்ஸிடம் கூறி அவசரமாக கதீடரை (catheter) போடுமாறு கூறினேன். கிட்டத்தட்ட இரண்டு லீட்டருக்கு அதிகமான சிறுநீர் வெளியாகி வயிறு வீக்கம் இலேசாக குறைந்தது.

பக்கத்திலிருந்த வைத்தியர் பல் எல்லாம் கலர் மாறி கறுப்பா இருக்கு, எனாமல் (enamel) எல்லாம் தேய்ஞ்சு போய் இருக்கு, வாயில நிறைய காயம் இருக்கு, இப்படி மொடர்னான பெண்ணுக்கு 80 வயது கிழவியைப் போல பல் இருப்பது ஏன்? எனக் கேட்டார். மேலும் அப்பெண்ணின் இடது கையின் மணிக்கட்டுப் பகுதியில் பல கீறல் அடையாளங்களும் காணப்பட்டன. (இப்படியான அடையாளங்கள் தற்கொலைக்கு முயற்சித்தவர்களின் உடல்களில் காணப்படுவதுண்டு).

ஆரம்ப கட்டப் பரிசோதனைக்குப் பிறகு, இந்த பெண் எக்ஸ்டசி (ecstasy ) என்ற மாத்திரையை எடுத்திருக்க வேண்டும் என

# சீரழியும் இளைய தலைமுறையின் உண்மைக்கதை



சக வைத்தியர்களிடம் கூறினேன்.

இந்த மாத்திரை போதைப் பொருளுக்கு அடிமையாகியவர்கள் போதையை ஏற்படுத்துவதற்காக பாவிப்பது. இதனால் பல மரணங்கள் ஐரோப்பிய நாடுகளில் நிகழ்ந்துள்ளது. இலங்கையிலும் இதன் பாவனை அண்மைக் காலங்களில் அதிகரித்து வருகின்றது.

இந்த நோயாளிக்கு உடனடியாக சில இரத்த மாதிரிகளை எடுக்குமாறும், காய்ச்சலைக் கட்டுப்படுத்த மருந்துகளை ஆரம்பிக்குமாறும் கூறி ஒக்ஸிஜன், சேலைன் மேலும் சில மருந்துகளை வழங்கி விட்டு பெற்றோர்களைச் சந்திக்க நகர்ந்தேன். கிட்டத்தட்ட 50 வயது மதிக்கத்தக்க நல்ல வசதியான தோற்றமுடையவர்களாக பெற்றோர்கள் இருந்தார்கள்.

ஆரம்பத்தில் இரண்டு பேரும் தாம் தனியானதொரு கம்பனி வைத்திருப்பதாகவும், பல பேர் அதில் வேலை செய்வதாகவும் தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டார்கள்.

இவ எங்கிட ஒரே பிள்ளை என ஆங்கிலத்தில் உரையாடலை தொடர்ந்தார்கள். நல்ல வசதியான குடும்பம், பெற்றோர்கள் இருவரும் நன்கு படித்தவர்கள் என தெளிவாக விளங்கியது.

என்ன டொக்டர்...! எப்படி இருக்கா? என பெரியதொரு பரபரப்பில்லாமல் அந்த பெற்றோர்கள் கேட்டது எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

'சொந்த மகள். ஒரே பிள்ளை. சாகக் கிடக்கா. இவங்களுக்கு முகத்தில் கவலையையே காணவில்லையே?' என மனதுக்குள் நினைத்துக் கொண்டு எனது பேச்சைத் தொடர்ந்தேன்

மோசமான நிலைலதான் இருக்கா. போதைப் பொருள் ஒன்றை எடுத்திருக்கா போல. ட்ரீட்மென்ட் ஸ்டார்ட் பண்ணிருக்கோம் என நான் பதிலளித்தேன்.

டொக்டர் இது எங்களுக்கு ஃபெஸ்ட் டைம் இல்ல, நிறைய தரம் இவவைக் கொண்டு வந்திருக்கம். என்ன சொன்னாலும் இவ கேக்க மாட்டா, அவ அப்பிடித்தான், வேணாம் எண்டு போய்ட்டுது என தந்தை எரிச்சலுடன் கூறினார். என்ன நடந்த என்று தெளிவா சொல்ல ஏலுமா? எனக் கேட்ட போது, தாய் பேச ஆரம்பித்தார்.

இவ எங்கிட ஒரே பிள்ளை எண்டதால நல்லா செல்லம் குடுத்து வளர்த்திட்டம், சின்ன வயசில என்ன கேட்டாலும் வாங்கிக் குடுப்பம், எங்க வேணும்னாலும் கூட்டிப் போவம். எங்களுக்கு தொழில்லயும் எந்த பிரச்சினையும் இல்ல ஆனா நாங்க சொந்தத் தொழில் செய்யிறதால கொஞ்சம் பிசி. வீட்டு வேலைக்கு ஆள் வெச்சித்தான் இவவைப் பாத்துட்டம்

இவ நல்ல கெட்டிக்காரி, ஸ்கூல்ல எல்லாத்திலயும் ஃபஸ்ட்தான். இவட டீச்சர்ஸ் கூட எங்கள கூப்பிட்டு இவள நிறைய தரம் பாராட்டி இருக்காங்க. இவவைப் பத்தி நாங்களும் பெருமையா எல்லாரிட்டயும் பேசிவோம். O/L மட்டும் நல்லாத்தான் படிச்சா, 9A ரிசல்டும் எடுத்தா. ஒரே அவ எங்கிட்ட சொல்ரது 'வீட்ட நான் தனியத்தான் இருக்கன், நீங்க வாரதுவும் இல்ல, அலுப்பாக (boring) இருக்கு' எண்டு.

என்ன செய்யிரது? நாங்க பிஸ்னஸ்ல பிசி எங்கிரதால வீட்ட போக நைட் ஆகிடும். அந்த டைம்தான் இவ 'பெட்மின்டன் (Bedminton) விளையாட இன்ரஸ்ட்டா இருக்கு, என்ட பிரண்ட்ஸ்சும் போறாங்க. நானும் போகப் போறன்' எண்டா.



ஆரம்பத்தில எங்களுக்கு விருப்பமில்லத்தான். ஆனா இவ அடிக்கடி கேட்டதால நாங்களும் அனுமதிச்சம். இவ தொடர்ச்சியா விளையாடப் போக ஆரம்பிச்சா. நாள் போகப் போக கொஞ்சம் கவலையா, எப்பவும் கோவமாவும் இருந்தா. நாங்க நைட்ல லேட் ஆகி வாரதாலயும், அடிக்கடி வெளிநாட்டு ட்ரிப் போனதாலயும் மகளோட பெரிசா கதைக்க கிடைக்கேல்லை.

சில நாட்கள்ல எனக்கு தெரிஞ்ச ஓராள் வந்து இவ, பொடியன் ஒராளோட நைட் கிளப்புக்கு போன போது கண்டதாகச் சொன்னார். நான் அத நம்பல்ல. 'என்ட பிள்ளையைப் பத்தி எனக்குத் தெரியும், அவ அப்படி செய்ய மாட்டா, இனி என் கிட்ட இப்படி பேசினா நான் சும்மா இருக்க மாட்டேன்' என அவரிடம் சத்தமிட்டேன். மகள் மேல இருந்த அதீத நம்பிக்கையால தான் அப்படிச் சொன்னேன்.

கொஞ்ச நாள் போன பிறகு அவக்கு படிப்புல விருப்பமே இல்ல, ஒரே எரிச்சலுடன் தான் இருப்பா, நாங்க என்னவும் கேட்டா ஒரே சண்டைதான். அவக்கு நாங்க வேறயா பேங்கல காசு போட்டு கொடுத்து வெச்சிருந்தம். பிறகு நாங்க எக்கவுண்ட்டை செக் பண்ணி பார்த்த நேரம் பேங்கல காசு ஒண்டும் இல்ல, எல்லாத்தையும் எடுத்திட்டா. அடிக்கடி காசு கேட்பா.. எங்களுக்கும் அதுக்கு பிறகுதான் இவ வித்தியாசமா இருக்கிறது விளங்கிச்சுது. அதால ஸ்கூல் பிரன்ஸ்கிட்ட கேட்டம், அவகளும் இவ எங்களோட முன்ன மாதிரி இல்ல எண்டும், ஸ்கூலுக்கு வந்தா கதைக்க மாட்டா, தூங்கிட்டே இருப்பா எண்டும் சொன்னாங்க.



# சீரழியும் இளைய தலைமுறையின் உண்மைக்கதை

நாங்க மகளோட பேசுவம் எண்டு போனா கதவை பூட்டிட்டு தூங்குவா. டொக்டரிட்ட போவம் என்டா எனக்கு என்ன பைத்தியமா எண்டு கேட்டு சண்டை பிடிப்பா. எங்களுக்கு என்ன செய்யிரது எண்டு விளங்கல்ல. நாங்க ரெண்டு பேரும் பெட்மின்டன் கிளாசுக்கு போறதை நிப்பாட்டுவம் எண்டு அவவிட்டை சொன்ன போது, அவ ரூமைப் பூட்டிக் கிட்டு கைய வெட்டிட்டா. அதால ரெத்தம் ஓடி சாகுற நிலைமைக்கு போயிட்டா. கஷ்டப்பட்டு கதவை உடைச்சுத்தான் ஹொஸ்பிட்டலுக்கு கொண்டு போனனாங்கள்.

அங்க ரெத்தம் ஏத்தித்தான் அவவைக் காப்பாத்தினது. அதில இருந்து நாங்க ஒன்டுமே கேக்கிரதில்லை. கொஞ்ச நாள் போன பிறகு, பல ஆண்களுடன் பழக ஆரம்பிச்சா. நைட் கிளப் பார்ட்டி எண்டு போக ஆரம்பிச்சா. நிறைய தரம் ஹொஸ்பிட்டல்ல அட்மிட் ஆகிருக்கா. குடிக்கிறதையே தொழிலா செய்தா. நாங்களும் எவ்வளவோ ட்ரை பண்ணிப் பார்த்தோம் ஆனா அவ கேட்கிர மாதிரி இல்ல. எல்லா டொக்டர்மார் கிட்டையும் காட்டிப் பார்த்துட்டோம்.

ஆனா இவ திருந்துற மாதிரி இல்ல. நானும் இவரும் நிறைய நாள் தனிய அழுது இருக்கம். என்ன சொல்லியும், எவ்வளவு அழுதும் ஒரு கணக்கும் இல்ல. இனி பேசினா வீட்ட விட்டு போயிடுவன் எண்டா. இவவால நாங்க பட்ட அவமானம் கொஞ்ச நஞ்சமில்ல. நாங்க என்ன டொக்டர் செய்யிறது..? ஒரே பிள்ளை. இப்படி ஆயிட்டுது.இவ செத்தாலும் பரவாயில்ல. கவலையுடன் கூறி முடித்தார் தாய். [ஒரு தாய் தனது பிள்ளை செத்தா நல்லம் என்று கூறியது எனக்கு ஆச்சரியமாகவும், புது அனுபவமாகவும் இருந்தாலும் எந்த அளவுக்கு அவர் பாதிக்கப்பட்டிருப்பார் என தெளிவாகக் காட்டியது.] எனினும் தீவிர சிகிச்சைப் பிரிவில் (HDU) வைத்துப் பார்ப்பதாக கூறி அவர்களிடம் இருந்து விடை பெற்றேன்.

ஒரு மணித்தியாலம் செல்லவில்லை, எனது போன் ரிங் செய்தது. மீண்டும் ETU இல் இருந்து என்னை அவசரமாக வருமாறு அழைப்பு. நான் அங்கே போனபோது அந்த யுவதியின் இதயம் தாறுமாறாக இயங்குவதாகவும், ECG இல் Ventricular Tachycardia இருப்பதாகவும் உடனடியாக கரண்ட் சொக் (cardiac defibrillation) கொடுக்கப் போவதாகவும் கூறி உடனடியாக அதைச் செய்தார்கள். [இது ec-tasy போதை மருந்தால் ஏற்படும் உயிரைப் போக்கக் கூடிய மிக மோசமான விளைவாகும்.] அவருடைய ப்ரஷர் குறைவடைந்ததால் அதற்குரிய மருந்துகளும், செயற்கைச் சுவாசம் வழங்குவதற்குரிய ஏற்பாடுகளும் உடனடியாகச் செய்யப்பட்டன. பல தடவை கரண்ட் சொக் செய்தும் இதயம் தனது பழைய நிலைமைக்கு வர மறுத்தது. வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் சக உத்தியோகத்தர்கள் எல்லோரும் இந்த உயிரை எப்படியும் காப்பாற்றி விட வேண்டும் என்ற நோக்கில் போராடிக் கொண்டிருந்தார்கள். என்ன செய்வது? இறைவனின் நியதியை மாற்ற முடியுமா.? பல மணி நேரப் போராட்டத்தின் பின் அந்த யுவதி இறந்ததை மருத்துவ குழாம் உறுதி செய்தது. எனது மருத்துவ வாழ்நாளில் கண்ட மரணங்களில் மிக மோசமான மரணமாக இந்த ஒன்றைக் குறிப்பிடலாம்.

எனது அன்பு மாணவச் செல்வங்களே.!! இளைஞர், யுவதிகளே..!! போதைப் பொருளுக்கு அடிமையான யாரும் இந்த உலகில் நல்ல நிலைமையை அடைந்ததாகவோ நல்ல பெயர் பெற்றதாகவோ சரித்திரம் இல்லை. எத்தனையோ கழுகுகள் உங்களை இந்த மோசமான பழக்கத்திற்கு அடிமையாக்கி பணம் சம்பாதிக்க வேண்டும் என்று அலைந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் இப்படியான மோசமானவர்கள் உங்களை நெருங்கும் போது விலகி ஓடிவிடுங்கள்.

இல்லாவிட்டால் இந்த கழுகுகள் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் காவு கொள்ளும் காலம் வெகு தொலைவில் இல்லை. ஆரம்பத்தில் ஒரு தடவை உள்ளெடுத்துப் பார்ப்போம் என்று ஆசைப்பட்டவர்கள்தான் இன்று மிகப் பெரிய போதை வஸ்து பாவனையாளர்களாக மாறி அதிலிருந்து விடுபட முடியாமல் தவிக்கிறார்கள். இந்தப் போதைப்பொருளுக்கு அடிமையானால் உங்கள் எதிர்காலம் ஏன்? உங்கள் உயிருக்குக் கூட உத்தரவாதமில்லை என்பதைத்தான் நான் மேலே சொன்ன சம்பவம் உணர்த்துகிறது.

அன்பின் பெற்றோர்களே..!! உங்கள் குழந்தைகள் நல்லவர்கள்தான். ஆனால், அவர்களை வேட்டையாடுவதற்கு பல பிணந்தின்னிக் கழுகுகள் அலைந்து கொண்டிருக்கின்றன. உங்களது பிள்ளைகளை கவனமாக அவதானியுங்கள். அவர்களுடன் அன்பாகப் பழகி அவர்களின் மனதில் இடம் பிடியுங்கள். உங்களிடம் அவர்கள் எதிர்பார்ப்பது உங்களது அரவணைப்பையும் உங்களின் நேரத்தையும்தான், உங்களது காசையோ சொத்தையோ அல்ல. அவர்களை மோசமான விடயங்களில் இருந்து தவிர்ந்து வாழ வழிகாட்டுவது உங்களது தலையாய கடமை என்பதை மறந்து விடாதீர்கள்.

இவ்வாறான மோசமான போதைவஸ்து பாவனைகளில் இருந்து நாமும் நமது குடும்பமும் தவிர்ந்து வாழ வல்ல இறைவன் அருள் புரிவானாக.

Dr. A.H.M. அஸ்மி ஹசன்
MB-BS ( SL), MD ( Col)
விடே பொது வைத்திய நிபுணர்,
தள வைத்தியசாலை– காத்தான்குடி.




ஐங்கரன் விக்கினேஸ்வரா

# வன அழிப்பைத் தடுக்கும் லத்தீன் அமெரிக்க பூர்வகுடிகள்!

சிலி நாட்டின் தெற்கு பகுதியில் வாழும் பூர்வகுடி 'மப்புச்சே' (Mapuche) இனம். இந்த மக்கள் தங்கள் தேசிய இன விடுதலையை வலியுறுத்தி இன்றும் போராடி வரும் மக்களாக அறியப்படுகிறார்கள். ஆதிக்க, ஆக்கிரமிப்புச் சுரண்டலுக்கு உள்ளான ஒரு இனம், இன விடுதலையை வலியுறுத்தி இன்றும் போராடி வருகிறார்கள்.

## பூர்வீகத்தை மீட்கும் போராட்டம்:

மப்புச்சே மக்கள் மொத்த சிலி நாட்டின் மக்கள் தொகையில் 11% ஆக உள்ளனர். மப்புச்சே இனமக்கள் சிலி நாட்டில் தெற்கில் 'பயோ – பயோ' ஆற்றை எல்லையாகவும், மேற்கே பசிபிக் பெருங்கடலையும், கிழக்கே அர்ஜென்டினா நாட்டு எல்லையையும் கொண்டு 'அரௌகேனியா பகுதியில்' [Araucania Region] வாழ்கின்றனர்.



## மப்புச் சேமக்களின் பூர்வீகத்தை மீட்கும் போராட்டம்!

விவசாயம் இவர்களுக்கு அடிப்படைப் பொருளாதாரமாக இருக்கின்றது. இவர்கள் மட்டுமின்றி இம்மண்ணின் பிற பூர்வகுடிமக்களான அய்மாரா, பாலிநேசியன், ரபானுய் இன்னும் பல பூர்வகுடி மக்களும் சிலி நாட்டில் வாழ்ந்து வருகின்றனர்.

சிலி மற்றும் அர்ஜெண்டாவில் வாழ்கின்ற மப்புச்சே மக்களின் கலாச்சாரம் என்பது கி.மு 500 அல்லது 600க்கு முன்பானது என்று அகழ்வாராய்ச்சிகள் குறிப்பிடுகின்றன.

## ஒடுக்கப்படும் பூர்வ குடிமக்கள்:

தென் அமெரிக்க நாடான அர்ஜென்டினாவை ஒட்டிய சிலி நாட்டின் தெற்குப் பகுதியில் வாழும் பூர்வகுடி மப்புச்சே இனம். இந்த மக்கள் தங்கள் தேசிய இன விடுதலையை வலியுறுத்தி இன்றும் போராடி வரும் மக்களாக அறியப்படுகிறார்கள்.

காலனித்துவ சுரண்டலுக்கு உள்ளான ஒரு இனம் இன விடுதலையை வலியுறுத்தி இன்றும் போராடி வருகின்றது. ஏகாதிபத்திய நலனுக்காகவே மக்களுக்கு எதிரான அரசுகளும் சர்வாதிகாரிகளும் பல்வேறு நாடுகளில் உருவாக்கப்படுகின்றன.

அந்த அரசுகளைக் கொண்டே உரிமைகளுக்காகப் போராடும் மக்களை அடக்கி ஒடுக்குவதும் இனப்படுகொலைகளை நிகழ்த்துவதும் வல்லாதிக்கங்களால் திட்டமிட்டு நடத்தப்படுகிறது



உலகெங்கும் ஏகாதிபத்திய நலனுக்காக ஒடுக்கப்படும் பூர்வகுடி மக்களும், தேசிய இன மக்களும் தங்கள் உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் போராடி வருகின்றனர். குறிப்பாக இத்தகைய விடுதலை உரிமைப் போராட்டங்களை வல்லாதிக்க நாடுகளின் நலனுக்காக அந்தந்த நாடுகளில் இருக்கும் அரசுகள் ஒடுக்கிவருவது பன்னெடுங் கால மாகத் தொடர்ந்து வருகிறது.

## ஸ்பானிய படையெடுப்பும் காலனித்துவமும்:

ஸ்பானியர்களின் வருகைக்கு முன்பு மப்புச்சே மக்கள் உழவு, நெசவு தொழில்கள் செய்து சுய பொருளாதாரத்துடன் வாழ்ந்துள்ளனர். ஸ்பானிய படையெடுப்பின் போது ஸ்பானியர்களை மப்புச்சே இனக்குழு மக்கள் மூர்க்கமாக எதிர்த்தனர்.

சுமார் மூன்று நூற்றாண்டுகளாக சிலி நாடு ஸ்பானிய காலனியாக இருந்தது. 16ம் நூற்றாண்டில் ஸ்பானியர் வருகையின் போது மப்புச்சே மக்கள் சிலி நாட்டின் தெற்கே 'இட்டாடா' மற்றும் 'டோல்டன்' ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் வாழ்ந்து வந்தனர்.

இதர பூர்வகுடிகளான 'ஹோலிச்சி' மற்றும் 'குன்கோ' இனத்தினர் நாட்டின் தெற்கில் வாழ்ந்து வந்தனர். 'சிலியோ அர்ச்சிபெலகோ' ( Chilleo archipelago) என்று இவர்கள் அழைக்கப்பட்டார்கள்.

'தேய்க்குள்ச்சி' என்ற இனத்தினர் சிலர் மப்புச்சே மொழியையும் கலாச்சாரத்தையும் ஏற்றுக்கொண்டு தங்களை 'அரௌகேனியர்களாக' அடையாளப்படுத்திக் கொண்டனர். ஸ்பானிய காலனியாதிக்க காலத்தில் மப்புச்சே மற்றும் ஸ்பானியர்கள் இனக்கலப்பால் உருவான சந்ததியினர் 'மெஸ்டிசோ' என்று அழைக்கப்படுகின்றனர்.

## சொந்த மண்ணிலே உரிமைமறுப்பு:

சொந்த நிலத்திலேயே மப்புச்சே மக்களின் குடியுரிமையும், தேசமும் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. அவர்களுக்கான உரிமை மறுக்கப்பட்டது. அம்மக்களின் மொழிக்கும் கலாச்சாரத்திற்கும் சிலி அரசு எந்த அங்கீகாரமும் வழங்கிடவில்லை.

இன்றுவரை தங்கள் இன உரிமைக்காகவும் நிலத்திற்காகவும் சிலி மற்றும் அர்ஜென்டினாவில் மப்புச்சே மக்கள் போராடி வருகின்றனர். அரௌகேனியா நிலப்பரப்பில் வாழ்ந்து வந்த இவர்கள் ஸ்பானிய காலனி ஆதிக்கத்தின் வரலாற்றில் அரௌகேனியான்கள் (Araucanians) என்று அழைக்கப்பட்டனர்.

'அரௌகேனியான்கள்' என்ற சொல்லாடல் இன்று இழிசொல்லாக மாற்றப்பட்டுள்ளது. 17 முதல் 19 ஆம் நூற்றாண்டு வரை மப்புச்சே மக்கள் சிலர் கிழக்கு நோக்கி ஆண்




டெஸ் மற்றும் பம்பாஸ் என்ற பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தனர்.

அங்கே வாழ்ந்த 'போய' மற்றும் 'பேயெஞ்சே' பூர்வகுடிகளுடன் உறவு ஏற்படுத்தி கொண்டனர். பம்பாஸ் பகுதியில் வாழ்ந்த வேறு சில இனக்குழுக்களான பேயெஞ்சே, ராஇங்குயில் மப்புச்சே மக்களுடன் இணைந்துக்கொண்டனர்.

ஸ்பானிய காலனியத்தில் இருந்து சிலி விடுதலை பெற்றதைத் தொடர்ந்து 19ஆம் நூற்றாண்டு பிற்பகுதியில் ஐரோப்பிய மற்றும் 'மெஸ்டிசோ' சிலியர்கள் மப்புச்சே மக்கள் வாழ்ந்து வந்த அரௌகேனியா பகுதியை ஆக்கிரமிக்க தொடங்குகின்றனர்.

## காலனி ஆதிக்கத்தில் மக்கள் படுகொலை:

ஸ்பெயின் காலனிய தங்கச்சுரங்க பணியில் வேலை செய்த மப்புச்சே மக்கள் பலர் இறந்து போனார்கள். ஸ்பெயின் காலனி அரசு தங்கள் படைகளில் மப்புச்சே மக்களை இணைத்து போரிட வைத்தனர். இதனால் மப்புச்சே மக்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்து போனது.

ஸ்பெயின் காலனித்துவத்திற்கு பின்னர், மப்புச்சே இனத்தினர் வாழ்ந்து வந்த வளமான நிலத்தை அபகரிக்கவும், அந்நிலங்களில் விவசாய உற்பத்தியை பெருக்கிடவும் சிலி அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது. 19ஆம் நூற்றாண்டில் காலனிய காலத்திற்கு பின்னர் சிலி நாட்டின் பணப்பயிர் தொழிலுக்கான நிலப்பரப்பு விரிவடைய தொடங்கியது.

இச்சூழலில் மப்புச்சே மக்கள் வாழும் வடக்கு அரௌகேனியா நிலப்பரப்பில் இன்றளவும் நில ஆக்கிரமிப்பு சண்டைகளும், வன்முறைகளும் சிலி அரசினால் திட்டமிட்டு நடத்தப்பட்டு வருகிறது. மேலும், மப்புச்சே மக்களின் பாரம்பரிய கல்வி முறைகளும் அரசினால் ஒழிக்கப்பட்டுவிட்டது.

## காடுகள் அழிப்பும் நில அபகரிப்பும்:

வரலாற்று ஆசிரியர்களின் தகவற்படி அரசின் நில அபகரிப்பு கொள்கை, பஞ்சம், நோய் தொற்று போன்ற காரணங்களால் மப்புச்சே இன மக்கள் தொகை ஐந்து லட்சத்தில் இருந்து வெறும் இருபத்தி ஐந்தாயிரமாக சுருங்கி போனதாக குறிப்பிடுகின்றார்கள். இதனால் எண்ணற்ற மப்புச்சே மக்கள் தங்கள் சொந்த நிலத்தைவிட்டு அகதிகளாக வெளியேறி வேறு இடங்களுக்கு இடம்பெயரும் அவலம் ஏற்பட்டது.

லத்தீன் அமெரிக்க நாடுகளில், குறிப்பாக பிரேசில், காடுகளை அழித்து பணப்பயிர்களை வளர்க்கும் பெருநிறுவனங்களின் வேட்டைக்காடாக மாறியுள்ளது. இக்காடுகளில் வாழ்ந்து வரும் தொல் பழங்குடியினரை வலுக்கட்டாயமாக அப்புறப்படுத்தும் பணிகளை அந்நாடுகளின் மேற்குலக சார்பு அரசுகள் செய்து வருகின்றன.

இதற்கு எதிராக பல இடங்களில் பழங்குடி மக்கள் போராடி வருகின்றனர். மரங்களை வெட்டி ஏற்றுமதி செய்யும் பெருநிறுவனங்கள் சிலியின் ஆயிரக்கணக்கான ஏக்கர் வால்டிவியன் காட்டு நிலப்பரப்பு அழித்துள்ளனர். அந்நிலத்திற்கு ஒவ்வாத அந்நிய மரங்களான சவுக்கு மற்றும் தைல மரங்களை பயிர் செய்கின்றனர்.

## சிலியில் இயற்கை கனிமவளம்:

சிலியில் குவிந்திருக்கும் இயற்கை கனிம வளங்களை குறிவைத்து வந்த ஸ்பானிய காலனிய வரலாற்றை தொடர்ந்து விடுதலை




பெற்ற சிலியின் அதிகாரவர்கம் தீவிர முதலாளித்துவத்தை ஆதரித்து வந்தது. மூன்று ஆண்டுகளான தைல மரம் நாளொன்றுக்கு 20 லிட்டர் நிலத்தடி நீரை உறிஞ்சிவிடுகிறது.

மேலும், இம்மரங்களை வளர்க்க ஏராளமான இரசாயன உரங்களை கொட்டி நிலத்தை மலடாக்குவதாக மப்புச்சே மக்கள் குமுறுகின்றனர். இப்படியாக வளர்க்கப்படும் மரங்கள் சீனா, ஜப்பான், அமெரிக்கா, இத்தாலி மற்றும் உலகெங்கும் ஏற்றுமதியாகின்றது.

தங்கம், தாமிர சுரங்கங்கள், மீன்பிடித் தொழிலை அடுத்து சிலியின் பொருளாதாரத்திற்கு அதிக பங்களிப்பு செய்திடுவது சிலியின் காடு அழிப்புத் தொழில்தான். சிலி அரசின் துணையுடன் பெருமுதலைகள் தங்கள் நிலங்களை ஆக்கிரமிப்பதை எதிர்த்து மப்புச்சே மக்கள் போராடுகின்றனர். பன்னாட்டு முதலாளிகளின் வியாபாரத்திற்காக நடைபெறும் வனஅழிப்பை தடுத்திட 'ஸ்டான்ட் எர்த் குரூப்' (Stand Earth Group) என்ற வன பாதுகாப்பு அமைப்பு சிலியின் வனப்பொருட்கள் வர்த்தக கொள்கைகளை மாற்றக்கோரி உலகளாவிய பிரச்சாரத்தை மேற்கொண்டது.

## சர்வாதிகார அதிபர் அகஸ்டோபினோச்சே:

சிலி நாட்டின் முன்னாள் ராணுவ சர்வாதிகார அதிபர் அகஸ்டோ பினோச்சே (Augusto Pinochet 1973 – 1990) மப்புச்சே மக்களின் போராட்டத்தை ஒடுக்க தீவிரவாத தடுப்பு சட்டத்தை இயற்றினார்.

அந்த சட்டத்தை பயன்படுத்தி இன்றைய அரசும் போராடும் மப்புச்சே மக்களை ஒடுக்கி வருகிறார்கள். போராடி வரும் மப்புச்சே மக்களின் மீது தீவிரவாத பாதுகாப்பு சட்டம் பிரயோகப்படுத்துவதையும், போராட்டத்தின் நிலவரத்தை கண்டறிய ஐ.நா மன்றம் பென் எமெர்சன் என்ற அதிகாரியை சிலி நாட்டிற்கு அனுப்பி வைத்தது. அவர் ஆய்வு செய்து சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் தீவிரவாத தடுப்பு சட்டத்திற்கு எதிராக ஐ.நா மன்றம் தனது கண்டனத்தை ஜீலை 2013ல் பதிவு செய்தது.

தங்கள் பூர்வீக நிலத்தை சிலி அரசிடம் இருந்து மீட்டு தங்களிடம் ஒப்படைக்க வேண்டும். அந்த பகுதிகளை தன்னாட்சி பிரதேசமாக அறிவித்திட வேண்டும் என்பதே மப்புச்சே மக்களின் கோரிக்கையாக உள்ளது.

## மப்புச்சே இனவிடுதலைக்காக போராடும் அமைப்பு:

மப்புச்சே இன விடுதலைக்காக போராடும் 'குவார்டினடோரா அறவுக்கோ மல்லேக்கோ' (Coordinadora Arauco Malleco & CAM) எனும் அமைப்பாகும். இதன் தலைவர் 53 வயதான எக்டர் லைட்டுள் (Hector Llaitul) கல்லூரி மாணவராக இருந்த காலம் முதலே இடதுசாரி அமைப்புகளுடன் இணைந்து இயங்கி வருபவர்.

இவர் அகஸ்டோ பினோச்சே சர்வாதிகார அரசுக்கு எதிராக போராடியவர். 1998ல் மப்புச்சே தலைவர்களுடன் இணைந்து CAM போராட்ட அமைப்பை தோற்றுவித்தார். இந்த அமைப்பானது மப்புச்சே மக்களின் நிலங்களை, அரசு மற்றும் அரசின் ஆதரவு பெற்ற பெரு நிறுவனங்களிடம் இருந்து மீட்பதை பிரதான கோரிக்கையாக முன்நிறுத்துகின்றது.

எக்டர் லைட்டுள் பலமுறை சிலி அரசாங்கத்தினால் தீவிரவாதி முத்திரை குத்தப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். தீவிரவாத செயல்களில் ஈடுபட்டதாக 2017 இல் கைது செய்யப்பட்டார். இவர் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் அனைத்தும் சிலி ராணுவத்தால் கூறப்பட்ட பொய்க் குற்றச்சாட்டுகள் என நிரூபிக்கப்பட்டு ஓராண்டு சிறைவாசத்திற்கு பிறகு விடுதலையானார்.

## வன அழிப்பை எதிர்த்து போராட்டம்:

CAM அமைப்பு வனஅழிப்பை செய்திடும் பெருநிறுவனங்களின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்திட, அந்நிறுவனங்களின் ரயில் மற்றும் சாலைப் போக்குவரத்தை தடுப்பது, தொழிற்சாலை எந்திரங்களை சேதப்படுத்துவது என முதலாளிகளுக்கும் அவர்களின் அரசுக்கு எதிராகவும் மூர்க்கமாகப் போராடி வருக்கின்றனர்.

அதே நேரம், CAM அமைப்புக்கு எதிராகவும், மப்புச்சே இன மக்களுக்கு எதிராகவும் சிலி அரசு தனது காவல்துறையையும், ராணுவத்தையும் ஏவி அவர்களின் நியாயமான போராட்டத்தை அடக்கி ஒடுக்கி வருகிறது.

## மப்புச் சேபழங் குடிகளின் போராட்டம்:

2018 இல் மாப்புச்சே இன தலைவர்களில் ஒருவரின் பேரனை, 24 வயதே நிரம்பிய விவசாய இளைஞனை, ட்ராக்ட்டரில் செல்லும் போது காவல்துறையினர் பின்புறமிருந்து சுட்டுக் கொன்றனர். அந்த இளைஞனுடன் பயணம் செய்த 15 வயது சிறுவனை கைது செய்து அடித்துத் துன்புறுத்தினர். இந்த சம்பவம் மாப்புச்சே மக்களிடையே கடும் கொந்தளிப்பை உருவாக்கியது.

இது போன்ற பல அடக்குமுறைகளை எதிர்கொண்டாலும் இந்த குறிப்பிட்ட சம்பவம் அவர்களின் போராட்டத்தை தீவிரப்படுத்தியது. படித்த மப்புச்சே இளைஞர்கள் தங்கள் பூர்வீக நிலங்களையும் தன்னாட்சிப் பிரதேச உரிமையையும் பெறுவது மட்டுமே இதற்கான தீர்வாக அமையும் என்று உறுதியாக நம்புகின்றனர்.

தங்கள் போராட்டத்தின் ஒரு பகுதியாக மீட்டெடுத்த பூர்விக நிலங்களில் 'இது மீட்கப்பட்ட நிலம்' என்று அறிவிப்பு பலகைகளை வைத்துள்ளனர். அவ்வாறு மீட்கப்பட்ட நிலங்களில் மின்சாரம், தண்ணீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

மீட்கப்பட்ட நிலங்களிலிருந்து அம்மக்களை அரசு தனது இராணுவத்தை கொண்டு அடித்து விரட்டுவதும் அரங்கேறி வருகிறது. அரசின் இந்த அச்சுறுத்தல்களுக்கு அஞ்சிடாமல் அம்மக்கள் மீண்டும் அதே நிலத்தை கைப்பற்றி அங்கே குடியேறி வருகிறார்கள். இப்படியாகத் தொடர்ந்து நடைபெற்று வருவதால் ஒரு கட்டத்தில் இராணுவம் சோர்வுற்று வெளியேற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது.

## ஆயுதம் தாங்கிய போராட்டம்:

தற்பொழுது, மப்புச்சே இன உரிமைக்கான ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் பல்வேறு புதிய இளைஞர் குழுக்களும் இறங்கியுள்ளன. இந்த புது குழுக்கள் செய்யும் வன்முறைகளை CAM மீது பழி சுமத்தி அரசு சிலி மக்களிடையே பிரச்சாரம் செய்தும் வருகிறது. உலகெங்கிலும் போராடும் இயக்கங்கள் போன்றே எக்டரின் தலைமையிலான CAM இயக்கமும் பல்வேறு ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளுக்கு






உள்ளாகியுள்ளது. இவை அனைத்தும் அதிகார வர்கத்தினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் வழக்கமான பொய்ப் பிரச்சாரங்களே ஆகும்.

சிலி அரசின் குற்றச்சாட்டுகள் பற்றிய கேள்விக்கு பதிலளித்த எக்டர், இத்தகைய குற்றச்சாட்டுகள் விடுதலை போராட்ட இயக்கங்கள் மீது அதிகார ஊடகங்களால் வைக்கப்படுவது வழக்கமான செயல் தான். ஆனால், எங்கள் இயக்கத்தை பொறுத்தவரை அது பொய் குற்றச்சாட்டு என்பதை இயக்கத்தின் தலைவர் என்கிற முறையில் நான் உறுதியாக கூறுவேன் என்றார்.

### சமத்துவ சமூகம் உருவாகவேண்டும்:

மப்புச்சே மக்களின் விடுதலை, மப்புச்சே நாட்டில் ஒரு சமத்துவ சமூகம் உருவாக வேண்டும் என்பதே எக்டரின் கனவாக உள்ளது.

2019 இல் சிலி தலைநகரில் மக்கள் மெட்ரோ ரயில் கட்டண உயர்வுக்கு எதிராகவும், வளர்ந்து வரும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிராகவும் கடுமையான தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்த தொடர் போராட்டத்தின் வெற்றியாக செபஸ்டியன் பினேராவின் அரசாங்கம் வெளியேற்றப்பட்டது.

இதனையடுத்து நடந்த தேர்தலில் பெண்கள் அமைப்புகள், பூர்வகுடி மக்களின் உரிமைக்காக போராடும் அமைப்புகள், முற்போக்கு இடதுசாரி அமைப்புகள், மாணவர் அமைப்புகள் என பல்வேறு அமைப்புகளின் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. இவர்கள் தங்கள் முதன்மைப் பணியாக இராணுவ சர்வாதிகாரி பினோச்சேவின் ஆட்சியில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பை திருத்துவதாக முடிவெடுத்திருக்கிறார்கள். இந்த மாற்றத்தை மேற்கொள்வதற்காக சிலியில் வாழும் அனைத்து மக்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த அரசியலமைப்பு திருத்தம் மப்புச்சே மக்கள் கோரும் விடுதலைக்கு வழி வகுத்திடுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். அதன் முடிவு எவ்வாறாக இருந்தாலும் மப்புச்சே மக்களுக்கான ஒரே தீர்வாக அம்மக்களின் விடுதலைக்காகப் போராடும் அமைப்புகள் முன்வைப்பது தனிநாடு என்பதே ஆகும். இந்த தீர்வுக்கான இலக்கை நோக்கிய மப்புச்சே மக்களின் பயணம் தொடரும் என்பதில் ஐயமில்லை!

பல அடக்குமுறைகளை எதிர்கொண்டதாலேயே அவர்களின் போராட்டம் தீவிரமானது. மப்புச்சே இளைஞர்கள் தங்கள் பூர்வீக நிலங்களையும் தன்னாட்சிப் பிரதேச உரிமையையும் பெறுவது மட்டுமே இதற்கான தீர்வாக அமையும் என்று உறுதியாக நம்புகின்றனர்.

# மீட்பர் வருவாரோ?

கருவறை போல
காப்பிடம் இல்லை.
காலகாலமாய் வழிவந்த
நம்பிக்கை இது!
காமுறும் உலகில்
தாய்மடிகூட
அரணாய் இல்லையே இங்கு.

போதைக்காக தன்னையே
அழிப்பவள்..
போனஸாக
கருவைச் சுமக்கிறாள்!
தொப்புள் கொடியில்
இணைந்த உறவை
கருத்திலே கொள்ளாது
கஞ்சா அடிக்கிறாள்!!

பிஞ்சுக் குழந்தை
உளநலம் தொலைத்தோர்
உடல்நலம் இழந்தவர்.
பாகுபாடின்றி
பாலியற் கொடுமைக்கு
பலிக்கடாவாகிறார்!!

உறவினர். அயலவர்.
தெரிந்தவர் அந்நியர்.
இளசுகள். முதியவர்
வயதுக்கு இங்கு
வரம்பேயில்லை
யார் மனதில் மிருகம்
குடிகொண்டிருக்கும்?
அதுவும் புரியவில்லை!!
எவரையும் இங்கு
நம்ப முடியவில்லை
வேலைக்குப் போனால்
வேறொரு தொல்லை.
வேலியே பயிரை
மேய்ந்திடத் துடிக்கும்.
தன்னையும் காத்து
குடும்பத்தைச் சுமக்க
தவித்திடும் தாய்க்குலம்
ஏராளம் இங்கு!!

பள்ளியில் மட்டும்
பாதுகாப்புண்டா?
‘நல்லாசான்’ சிலரும்
காமுறப் பார்க்கிறார்.
கண்ணாலே துகிலுரிந்து
வார்த்தையாலே
வல்லுறவு செய்கிறார்..!

கழிப்பிடங்களிலும்
‘கமெரா’ என்றானதால்
கழிவறைகூட பொதுவறை ஆச்சு!

இயற்கை உபாதையை
கழிக்கவும் அஞ்சும்
பிழைப்பென்ன பிழைப்பு?

மாணவர் மட்டும்
திறமா என்ன?
கேட்கவே கூசும் வார்த்தைகள்
தாராளமாய்ப் பேசுவர்!
கும்பலாகக் கூடி நின்று
நிர்வாணப் படம் பார்ப்பர்!
பட்டப் பகலில் தெருவில்
கைபிடித்து இழுப்பர்!
எதிர்த்தால் ‘ஆஸிட்’ அடிப்பர்!
கேட்டால் காதலென்பர்!!

பையிலே (போதை) மாத்திரை
அரிவாள் அணியுடன் கூட்டணி
எவருக்கும் அடங்கா திமிர்த்தனம்
பொய்கள் களவுகள்
வேலை வெட்டியில்லா
சோம்பேறித்தனம்
அத்தனையும் இணைந்ததுதான்
மாணவப் பருவம்
என்றாகிப் போச்சு!!

புடவைத் தலைப்பு
விலகுமா என்று
அத்தனை ‘ஃபோன்’களும்
காத்துக் கிடக்கும்.
சீச்சீ
பெண்களை
‘யோனி’யாய் மட்டுமே
பார்க்கும் பாவிகள் உலகம்.
இது நரகம்.

கடந்து போன காலங்கள்
மீண்டும் வாராதோ? - இந்தப்
பாவிகள் தன்னை - கொதி
எண்ணெயில் வாட்டிட
மீட்பர் மீண்டும்
மீண்டு வருவரோ?
குற்றமில்லா போதையில்லா.
பெண்களை மதிக்கும்
காலத்தை எமக்கு
மீட்டுத் தருவரோ?

யாரேனும்
காலச்சக்கரம் ஒன்றை
கண்டு பிடியுங்களேன்
முடிந்தால்
எங்கள் காவலர் காலத்தில்
நிம்மதியாய் வாழலாம்.

**பொழில்**

# சே குவேரா

**அங்கம்: 02**



இச்சமயத்தில், அவரது எண்ணங்களால் ஒரு கியூபா போராளி வசீகரிக்கப்பட்டார். அவர் பெயர் நிக்கோலோபஸ். கியூபாவின் ஜனாதிபதியாக இருந்த பாடிஸ்ட்டாவின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக ஃபிடல் காஸ்ட்ரோவின் தலைமையில் ஒரு புரட்சி ஏற்படுத்திய 'ஜூலை 26' எனும் இயக்கம் அப்போதுதான் தோல்வியைச் சந்தித்திருந்தது.

1953ம் ஆண்டு இதே நாள் கியூபாவில் கொடுங்கோல் ஆட்சி நடத்திக் கொண்டிருந்த பாடிஸ்டா தலைமையிலான அரசைத் தூக்கி எறியும் திட்டம் தீட்டினார் ஃபிடல் காஸ்ட்ரோ. புரட்சிக்குத் தேவையான ஆயுதங்களைப் பெறுவதற்காக, பிடல் அவரது சகோதரர் ரால் காஸ்ட்ரோ உள்ளிட்ட 120 வீரர்கள் இணைந்து சாண்டியாகோ கியூபாவில் அமைந்திருந்த மொன்காடா இராணுவத் தளத்தை தாக்குவதற்கான திட்டத்தைத் தீட்டினார்கள்.

1953ம் ஆண்டு ஜூலை 26 அதிகாலை 6.00 மணி. பிடல் அவரது சகோதரர் ரால் காஸ்ட்ரோ உள்ளிட்ட 120 வீரர்கள் சாண்டியாகோ கியூபாவில் அமைந்திருந்த கியூபாவின் இரண்டாவது மிகப் பெரிய இராணுவத் தளத்தை தாக்குகின்றனர். அச்சமயம் பாடிஸ்டா கட்டளைத் தளபதியாக கடமையாற்றிய தருணம் அது. தளத்தில் 400 க்கும் மேற்பட்ட வீரர்கள் இருந்தனர்.

பிடலினுடைய திட்டம் என்னவென்றால், அபெல் சண்டமரிய தலைமையிலான 20 வீரர்கள் அடங்கிய முதலாவது குழு இராணுவத் தளத்திற்கு முன்பாக அமைந்திருக்கும் வைத்திய சாலையைக் கைப்பற்றுவது. லெஸ்டர் தலைமையிலான 5 வீரர்கள் அடங்கிய இரண்டாவது குழு கட்டிடத்தைக் கைப்பற்றுவது, பிடல் தலைமையிலான 90 பேர் அடங்கிய மூன்றாவது குழு தளத்தைத் தாக்கி தொலைத்தொடர்பு நிலையத்தைக் கைப்பற்றுவது என்பதாகும்.

மொன்கடாவை முற்றுகையிட அவர் தலைமையில் 1953 ஜூலை 26 அன்று சியோனிப் பண்ணையிலிருந்து புரட்சிப்படை புறப்பட்டது. தாக்குதல் ஆரம்பிக்கின்றது. ஆயுதங்கள் தாங்கி வந்த வாகனம் தாக்குதலுக்கு இலக்ககின்றது. ஆயுதப் பற்றாக்குறையினால் கெரில்லா வீரர்கள் பலர் பின்வாங்குகின்றனர்.

பிடல் இழைத்த ஒரு சிறிய தவறினால் அவரின் வாகனம் சிறிய விபத்துக்குள்ளகின்றது. அவரைக் காப்பாற்ற கெரில்லா வீரர் ஒருவர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொள்ள, பிடல் தனது வாகனத்தை இராணுவத் தளத்தின் வாசலை நோக்கி செலுத்திக் கொண்டிருந்தார். ஆனால் வாகனத்தின் பின்னால் இருந்த வீரர்கள் தாக்குதல் ஆரம்பித்து விட்டதால் தாம் இராணுவத்தளத்தின் உள்ளே இருக்கின்றோம் என நினைத்து வெளியே குதிக்கின்றனர். இதனால் அபாயமணி ஒலிக்க பாடிஸ்டாவின் இராணுவம் சுதாரித்துக் கொள்கின்றது.

தாக்குதல் முடிவில் 15 கெரில்லா வீரர்களும் 3 இராணுவத்தினரும் கொல்லப்பட, 23 கெரில்லா வீரர்களும் 5 இராணுவத்தினரும் காயமடைகின்றனர். எஞ்சிய வீரர்கள், பிடல் மற்றும் அவரது தம்பி ரால் காஸ்ட்ரோ உட்பட அனைவரும் கைது செய்யப்பட்டு தீவுச்சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களில் 56 கெரில்லாக்கள் கொலையும் செய்யப்படுகின்றனர். பதினைந்து ஆண்டு கால சிறை வாழ்க்கை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. பின்னர் மக்கள் புரட்சியின் விளைவாக பிடல் பொது மன்னிப்பின் பெயரில் விடுதலை ஆகின்றார்.





# சே குவேரா

நிக்கோலோபஸ் குவேதமாலாவில் வைத்து 'சே'வைச் சந்தித்தபோது புத்துணர்ச்சி ஏற்பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க சில யோசனைகள் அவரது எண்ணத்தில் பளிச்சிட்டன. சித்தாந்தங்களில் தேர்ச்சி பெற்றிருந்த சே குவேரா மட்டும் கியூபா புரட்சியில் பங்கெடுத்தால், போராட்டத்துக்கு ஒரு புது வடிவம் கிடைக்கும் என்று லோபஸ் நம்பினார். இது குறித்து காஸ்ட்ரோவின் சகோதரர் ரால் காஸ்ட்ரோவுடன் பேசினார்.

இரண்டு மகத்தான சக்திகள் இணைந்த மிக முக்கிய தருணம். கியூபா வளர்ச்சியின் அத்திவாரம் அப்போது இடப்பட்டது. அப்போது 'சே'வுக்கு வயது 27. காஸ்ட்ரோவுக்கு 32. காஸ்ட்ரோவுக்காவது கியூபா தன் சொந்த நாடு. போராடிய வேண்டிய அவசியம் இயல்பானது. ஆனால் 'சே'வுக்கு அப்படி அல்ல. தனக்கு முற்றிலும் தொடர்பற்ற மற்றொரு தேசத்தில், அம்மக்களின் விடுதலைக்காகத் தன் உயிரைப் பணயம் வைத்து ஆயுதம் எடுப்பதென்பது, உலக வரலாற்றில் எப்போதும் எங்கும் நிகழ்ந்திராத ஒன்று. இதனால்தான் 'சே' மனிதருள் மாமனிதராக அடையாளம் காணப்பட்டார்.

புரட்சிக்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. ஏறக்குறைய ஒன்றரை வருட கடுமையான ஆயுதப் பயிற்சிக்குப் பிறகு 1956, நவம்பர் 26ம் தேதி இரவு மெக்ஸிகோ கடற்கரையில், 82 போராளிகள் ஒருவர் பின் ஒருவராக ஏறிக்கொண்ட பின், விடுதலையின் பாடலை முழங்கியபடி, கிரான்மா எனும் படகு கியூபாவை நோக்கிப் பயணித்தது.

காலநிலையில் ஏற்பட்ட சிக்கலால் படகு எதிர்பார்த்த இடத்தை எதிர்பார்த்த நேரத்தில் அடைய முடியாமல் போகின்றது. இதனால் இராணுவம் சுதாரித்துக் கொள்கின்றது. இச் சூழ்நிலையில் பிடல் தன் சகாக்கள் பலரை இழக்க நேரிட்டது. மிஞ்சியவர்களின் துணையோடு இராணுவத்திற்கு ஆயுதங்கள் வரும் இரயில் கவிழக்கப்படுகின்றது. இராணுவத்தினர் சிறைப்பிடிக்கப் படுகின்றனர்.

1957, ஜனவரி 17ம் தேதி, தளபதி லா பிளாட்டோ கொல்லப்பட்டதன் மூலம் புரட்சியாளர்களின் முதல் வெற்றிச் சங்கொலி கியூபாவில் எதிரொலித்தது. அன்று துவங்கி மூன்றாண்டுகள் தொடர்ச்சியாக கெரில்லா யுத்தம் நடந்தது. துவக்கத்தில் குழுவில் மருத்துவராகவும் லெஃப்டினென்ட்டாகவும் இடம்பெற்ற 'சே', தன் திறமை, துணிச்சல், மதிநுட்பம் ஆகியவற்றால் காஸ்ட்ரோவுக்கு அடுத்த நிலையிலிருந்து படைகளை வழி நடத்தினார்.. கொரில்லாப் படைக்குக் கமாண்டராக அறிவிக்கப்பட்ட 'சே'கடுமையான ஆஸ்துமா துன்புறுத்திய போதிலும், அடர்வனங்களிலும் மலைகளிலும் சளைக்காமல் வீரர்களுக்குத் தெம்பூட்டியபடி படையை வழி நடத்தினார்.

'சாவைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. என் பின்னால் வரும் தோழர்கள் என் துப்பாக்கியை எடுத்துக் கொள்வார்கள். தோட்டாக்கள் தொடர்ந்து சீறும்' போன்ற அவரது வாசகங்கள், களத்தில் வீரர்களுக்கு தெம்பூட்டி சீற்றம் கொள்ளவைத்தன.


யுவேராவில் நடைபெற்ற யுத்தத்தில், 53 ராணுவத் தினரை வெறும் 18 கெரில்லாக்களைக் கொண்டு வீழ்த்தியதுதான் 'சே'வின் வீரத்தை கியூபாவுக்கு வெளிச்சமிட்டது. 1958ம் வருடம் ஸாண்டா கிளாராவைக் கைப்பற்றினார் . கொடுங்கோலன் பாட்டிஸ்ட்டா ஸாண்டா டொமிங்கோவிற்குத் தப்பியோடினான். 1958 ஆகஸ்ட் மாதத்தில், புரட்சிப் படை தலைநகர் ஹவானாவுக்குள் ஊடுருவியது. கியூபா முழுவதும் காஸ்ட்ரோவின் வசமானது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தக் கெரில்லா யுத்த வெற்றி, உலகின் அனைத்து நாடுகளையும் வியப்பில் ஆழ்த்தியது.

1959, பிப்ரவரி 16ல் கியூபாவின் பிரதமராக காஸ்ட்ரோ பதவியேற்றவுடன் குவேராவை ஒரு கியூபன் என்று அறிவித்தபிறகு அந்த வருடம் அக்டோபர் மாதம் தேசிய வங்கியின் அதிபராகவும் ஃபிடல் காஸ்ட்ரோவால் நியமிக்கப்பட்டார் சே குவேரா. விவசாயத் துறையில் தேசியத் தலைவராக நியமிக்கப்பட்டார் 'சே'.

தேசிய வங்கியின் தலைவராக கியூபா ரூபாய் நோட்டுகளில் 'சே'' என கையெழுத்திடும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றார். பின் 1961ம் ஆண்டு தேசிய வங்கியின் பதவியைத் துறந்து தொழிற்துறை அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டார். இருந்தாலும் 'சே' தன்னை ஒரு சாதாரணக் குடிமகனாகவே அடையாளம் காட்டிக் கொண்டார்.

விவசாயக் கூலிகளுடன் சேர்ந்து கரும்பு வெட்டுவதும், தொழிற் சாலைகளில் இதர பணியாளர்களுடன் சேர்ந்து மூட்டை சுமப்பதுமாகவே வாழ்ந்தார். 'சே' மற்றும் காஸ்ட்ரோ இருவருக்குமிடையே யுத்தத்துக்கு முன்பும் பின்புமான உறவுகளில் வேறுபாடுகள் இருந்தது என்றாலும், ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்ததில்லை.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தை மூன்றாம் உலக நாடுகளின் பிரதிநிதியாக, ஒற்றை மனிதனாகத்





தன்னால் வேரறுக்க முடியும் என 'சே' திடமாக நம்பினார். கியூபாவுக்கு ஏவுகணைகள் இறக்குமதி செய்ய ரஷ்யா வாக்குறுதி தந்த போது, 'ரஷ்ய ஏவுகணைகள் கியூபாவில் இறங்கினால் அது முதலில் அமெரிக்க நகரங்களையே குறிவைக்கும்' எனத் தைரியமாகக் குரல் கொடுத்தார். அமெரிக்கா,



கியூபாவின் மீது விதித்த பொருளாதாரத் தடைதான் அவரது இந்தக் கட்டற்ற கோபத்துக்குக் காரணம்.

அமெரிக்காவின் சி.பி.என். தொலைக்காட்சி, ஒரு நேர்காணலுக்காக சேகுவேராவை நியூயார்க்குக்கு அழைத்தது. 'அமெரிக்கா ஒரு கழுதைப் புலி. அதன் ஏகாதிபத்தியத்தை நான் வேரறுப்பேன்' என அமெரிக்க மண்ணிலேயே துணிச்சலாகப் பேட்டி தந்தார் 'சே'. சென்ற இடங்களிலெல்லாம் அமெரிக்காவைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார்.

இந்நிலையில் காங்கோவின் அரசியல் சூழல், அவரை மிகவும் பாதித்தது. மக்கள் புரட்சிக்கு ஏதாவது செய்தாக வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. மூன்று மாத கியூபா அரசால் அங்கீகரிக்கப்படாத பயணத்துக்குப் பிறகு, 'சே'1965 மார்ச்சில் கியூபா திரும்பினார். விமான நிலையத்தில் அவரை ஃபிடல் காஸ்ட்ரோ கைகுலுக்கி வரவேற்றார். அதுதான் வெளியுலகுக்கு 'சே' நேரடியாக வெளிப்பட்ட கடைசி நிகழ்வு. அதன் பிறகு 'சே'வைக் காணவில்லை. எங்கே போனார் என யாருக்கும் தெரியவில்லை.

அன்றிரவு ஒரு சந்திப்பில், காஸ்ட் ரோவின் தம்பி ரால் காஸ்ட்ரோ 'சே' வை சுடு சொல்லால் அழைத்ததாகவும், அது 'சே'வின் மனதை மிகவும் காயப் படுத்தியதாகவும், அதுதான் 'சே' கியூபாவை விட்டு வெளியே செல்லக் காரணம் என்றும் சொல்லப் படுவதுண்டு.

அது மட்டுமன்றி வேறு சில காரணங்களும் சொல்லபடுகின்றது அவை 1964ம் ஆண்டு ஜூலை மாதம் இரு அமைச்சர்களின் நியமன சம்பவம். பொருளாதாரக் கொள்கைகளில் அமைச்சர்களிடையே இருந்த கருத்து வேறுபாடு பொதுமக்களுக்கு வெளிப்படையாகத் தெரிய ஒரு வாய்ப்பாகியது. அவ்விரு நியமனங்களுமே குவேரா வெளியேறுவதற்கு ஒரு தூண்டுகோலாகியது. மற்றுமொரு காரணம் குவேராவின் எண்ணமும் விருப்பமுமான மற்ற இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் ஆப்பிரிக்காவிலும் புரட்சி வெடிக்கச் செய்யும் திட்டம். மற்ற தலைவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து உள்நாட்டுப் பிரச்னைகளைத் தீர்ப்பது அதைவிட முக்கியம் என்று போர்க் கொடி தூக்கினார்கள்.

1964ம் ஆண்டு டிசம்பர் மாதம் குவேரா அமெரிக்கா, ஆப்பிரிக்கா, சீனா ஆகிய நாடுகளுக்கு மூன்று மாத அதிகாரப்பூர்வமான சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். திரும்பியபோது, தனது அதிகாரப்பிடி தளர்ந்து போனதை குவேரா அறிந்து கொண்டார். அதனால் கியூபாவை விட்டு விலகி மற்ற நாடுகளில் புரட்சி ஓங்குவதற்கு உதவி புரியும் பொருட்டு அங்கிருந்து கிளம்பினார்.

'சே எங்கே?' என பத்திரிகைகள் அலறின. அனைவரது பார்வையும் காஸ்ட்ரோ பக்கம் திரும்பியது. 'சே' வை சுட்டுக் –கொன்றுவிட்டார் காஸ்ட்ரோ எனுமளவுக்கு கோபம் கிளம்பியது. காஸ்ட்ரோவின் மௌனம் சந்தேகத்தை மேலும் அதிகப்படுத்தியது. 'சே எங்கே?' எனக் கேட்ட யாருக்கும்



காஸ்ட்ரோவால் வெளிப்படையாக பதில் சொல்ல முடியவில்லை. காரணம் சி.ஐ.ஏ.

உண்மையில் 'சே' ஃபிடல் காஸ்ட்ரோவின் முன்னிலையில் தனது எல்லா பதவிகளையும் கியூபா நாட்டு குடியுரிமையையும் துறந்தார். அந்த வருட ஜூலை மாதம் கெய்ரோ வழியாக காங்கோவிற்கு ரகசியமாகப் பயணித்தார். அவரது பதவி மற்றும் கியூபாவின் குடியுரிமை துறப்பு பற்றிய செய்தியை ஃபிடல் காஸ்ட்ரோ அக்டோபர் மாதம் கியூபன் மக்களுக்கு அறிவித்தார்.



# முதுமையில் தனிமை

# Senior Isolation


மூத்த பிரஜைகள் என்று அழைக்கப்படும் முதியோர்களை ஒவ்வொரு சமூகமும் கண்ணியமாகவும், கௌரவமாகவும் நோக்கி, அவர்களை மதிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் முகமாக, ஐக்கிய நாடுகள் பொதுச்சபை ஆண்டு தோறும் அக்டோபர் 1ம் தேதியை சர்வதேச முதியோர் தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. பொதுவாக 60 வயதுக்கு மேற்பட்டோர் முதியோர் என வரையறுக்கப் பட்டாலும், இன்றைய கால கட்டத்தில், சமூக அரசியல் சூழலும் பொருளாதார வளர்ச்சியும் வாழ்நாள் எதிர்பார்ப்பைக் கூட்டிக் கொண்டு போகின்றன. தற்போது உலகலாவிய ரீதியாக முதியோர் எண்ணிக்கை 60 கோடியைத் தாண்டியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை வரும் 2025ம் ஆண்டில் மேலும் அதிக அளவு உயர உள்ளதுடன், சராசரி ஆயுட் காலமும் 75 ஐத் தாண்டுகிறது. எது எப்படியாகினும், அவர்கள் மகிழ்வாக வாழ்கிறார்களா என்பது ஒரு கேள்விக் குறியாகவே உள்ளது?

பிசிராந்தையர் என்ற புலவர் 2000 ஆண்டுகளுக்கு முன்பு பாடிய புறநானூறுப் பாடல் 191 எனக்கு ஞாபகம் வருகிறது:

*'யாண்டுபல வாக , நரையில ஆகுதல்*
*யாங்கு ஆகியர்?' என வினவுதிர் ஆயின்,*
*மாண்டஎன் மனைவியோடு, மக்களும் நிரம்பினர்*
*யான்கண் டனையர்என் இளையரும்; வேந்தனும்*
*அல்லவை செய்யான், காக்க அதன்தலை*
*ஆன்றுஅவிந்து அடங்கிய கொள்கைச்*
*சான்றோர் பலர் யான் வாழும் ஊரே'*

தங்களுக்கு இவ்வளவு வயதாகியும் தாங்கள் எப்படி நரையில்லாமல் இருக்கிறீர்கள்? என்று கேட்பீர்களானால், சொல்கிறேன். சிறப்பான என் மனைவியோடு, என்னுடைய மக்களும் அறிவு நிரம்பப் பெற்றவர்கள். நான் எண்ணுவது போலவே, என்னிடம் பணிபுரிபவர்களும் எண்ணிப் பணியாற்றுகிறார்கள். என் வேந்தன் முறையல்லாதவற்றைச் செய்யாமல் நாட்டை ஆட்சி செய்கிறான். நான் வாழும் ஊரில், மாட்சிமைக்குரிய நற்குணங்களும் நல்லொழுக்கங்களும் நிறைந்து ஐம்புலன்களையும் வென்று, பணிவோடும் சிறந்த கொள்கைகளோடும் வாழும் சான்றோர்கள் பலர் உள்ளனர். எனவே, கவலைகள் இல்லாத வாழ்க்கையால் நரை உண்டாகவில்லை' என்கிறான் அந்த புலவன்.

ஆனால் இன்று நிலை மாறிவிட்டது. இன்று பொதுவாக மூன்று விதமாக இந்த முதியோர்கள் வாழ்கிறார்கள். உதாரணமாக, சிலர் பிள்ளைகளுடன் அல்லது உறவினர்களோடு வசிக்கிறார்கள், சிலர் கணவன் – மனைவி என்று இருவர் மட்டும் தனியாக வசிக்கிறார்கள், மற்றும் சிலர் ஆணோ அல்லது பெண்ணோ ஒருவராக தனியாக வசிக்கிறார்கள். இங்கு ஒரு சாரார் அவர்கள் எங்கு வசித்தாலும், சூழ்நிலை காரணமாக, தனிமையை உணர தொடங்குவதும், தாம் தனித்து விடப்பட்டு விடும் என ஏங்கத் தொடங்குவதும் அவர்களின் உடல் நிலையை / சுகாதாரத்தை மிகவும் பாதிக்கும் காரணியாகும். கொடிது கொடிது இளமையில் வறுமை என்றார் ஔவை அதற்குச் சற்றும் குறைந்ததல்ல முதுமையில் தனிமை!



# முதுமையில் தனிமை

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட புறநானூறு 243 இல் நாம் ஒரு முதியவரை சந்திக்கிறோம்.அவர் எப்படி இருக்கிறார் தெரியுமா?

*‘இனிநினைந்து இரக்கம் ஆகின்று; திணிமணல்*
*செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்*
*தண்கயம் ஆடும் மகளிரோடு கைபிணைந்து*
*தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி*
*மறையெனல் அறியா மாயமில் ஆயமொடு*
*உயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து*
*நீர்நணிப் படுகோடு ஏறிச்சீர் மிகக்*
*கரையவர் மருளத் திரையகம் பிதிர*
*நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து*
*குளித்துமணற் கொண்ட கல்லா இளமை*
*அளிதோ தானே யாண்டு உண்டு கொல்லோ*
*தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி நடுக்குற்று*
*இருமிடை மிடைந்த சிலசொல்*
*பெருமூ தாளரேம் ஆகிய எமக்கே’*

இங்கே முதல் பதினொரு அடிகளில் தம் இளமைக் காலத்தில் நிகழ்ந்த பசுமையான அனுபவங்களை எண்ணிப் பார்த்து அந்த இளமை இப்ப எங்கே போய்விட்டது? என பெரு மூச்சு விடுகிறார். அப்படி என்றால் இப்ப அவரின் நிலை என்ன? அதையும் கடைசி மூன்று வரிகளில் ...

‘பூண் சூட்டிய நுனியை யுடைய வளைந்த ஊன்றுகோலை ஊன்றித் தளர்ந்து, இருமல்களுக்கு இடை இடையே வந்த சில சொற்களைக் கூறும், முதுமையின் நிலை இரங்கத் தக்கது’ என்கிறார்.

மேலும் உடம்பின் வெவ்வேறு மாற்ற நிலையை குண்டலகேசிப் பாடல் ஒன்று இப்படிக் எடுத்து உரைக்கிறது.

*‘பாளையாம் தன்மை செத்தும்*
*பாலனாம் தன்மை செத்தும்*
*காளையாம் தன்மை செத்தும்*
*காமுறும் இளமை செத்தும்*
*மீளும் இவ் வியல்பும் இன்னே*
*மேல்வரும் மூப்பும் ஆகி*
*நாளுநாள் சாகின் றோமால்*
*நமக்குநாம் அழாதது என்னோ?’*

அதாவது, பாளை போன்ற இளங்குழந்தைப் பருவம் செத்து, குழந்தைப் பருவம் பிறக்கிறது. பின் குழந்தைப் பருவம் செத்து, காளைப் பருவம் பிறக்கிறது. அந்த காளைப் பருவம் செத்து, காதலுக்கு உரிய இளமைப் பருவம் ஏற்படுகிறது. அதுவும் பின் மாறி முதுமை உண்டாகிறது என்கிறது. ஆனால்,பொதுவாக இளமையைக் கொண்டாடும் சமுகம் முதுமை என்றால் முகம் சுளிக்கிறது. முகத்தில் சுருக்கம், உடலில் குடிகொள்ளும் நோய்கள், தள்ளாடும் நடை, புறக்கணிப்பு, தனிமை இப்படி நீளும் பட்டியலில் ‘முதுமையில் தனிமை’ மிகவும் கொடியது.

முதுமையில் தனிமைக்கான காரணங்களையும் அதன் விளைவுகளையும் நேரத்துடன் ஓரளவு விபரமாக நாம் அறிவதன் மூலம் அதை இலகுவாக தடுக்கலாம். மனிதர்களுக்கு வயது போகப் போக, தனிமையில் வசிக்கும் நிலையின் வாய்ப்பும் அதிகமாக அதிகரித்து செல்கிறது. தனிமையில் வாழ்வது, அவர் சமூகத்தில் இருந்து தனிமை படுத்தப்பட்டார் என்பதை குறிக்காது எனினும், கட்டாயம் ஒரு நோய் தாக்க நிலைக்கு அடிகோலக் கூடிய காரணிகளில் ஒன்றாகும். தனிமைக்கான



காரணங்கள் ஒருபுறம் இருக்க, அதனால் ஏற்படும் விளைவுகள் மிகவும் பாரதூரமானதும் ஆகும். இந்த முதுமை என்பது ஏதோ ஒரே இரவில் வந்து விடுவதில்லை. எனவே முதுமை எய்தும் முன்னரே, தன்னை அதற்குத் தயார்படுத்திக் கொண்டால் அதை அவரால் தன்பாட்டில் தவிர்க்கவும் முடியும்.

பொதுவாக இவர்கள் இரண்டு விதமான பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். முதலாவது, அவர்களது மூப்பு காரணமாக உடல் நலம் பாதிக்கப்படுதலும் அதன் காரணமாக, வெளியில் தனிமையில் போக முடியாததால், ஓர் இடத்தில் முடங்கிப் போதல், அதனால் பல தேவைகளைப் பூர்த்தி செய்ய பிறரைச் சார்ந்திருத்தல், சமூகத் தொடர்பு குறைந்து போதல் போன்றவையாகும். மற்றது மனம் சார்ந்த பிரச்சினைகள் ஆகும். உதாரணமாக, பிறரைச் சார்ந்திருப்பது, அவர்களால் உதாசீனப்படுவது, நிந்திக்கப்படுவது, பய உணர்வு, தனிமை உணர்வு போன்றவற்றால் அவதிப்படுவது, நேரத்தை உபயோகப்படுத்த இயலாமை, பொழுது போக்கின்மை மற்றும் வாழ்வில் ஆர்வ மின்மை போன்றவை ஏற்படுத்தும் மனஅழுத்தம் மற்றும் மனச்சோர்வு ஆகும். இவர்களது மிக முக்கிய தேவை என்பது அன்பு, ஆதரவு, கரிசனம், இன்சொல், கவனிப்பு போன்றவையாகும். ஆனால், அவர்கள் அனுபவிக்கும் பிரச்சினைகளில் மிக்க கொடுமையானது அவர்கள் அனுபவிக்கும் முதுமையில் தனிமைதான். உதாரணமாக, ஒரு நிறுவனத்தில் அல்லது கல்லூரியில் பலரோடு சேர்ந்து பணி செய்த ஒருவர் முதுமையில் தனிமையில் பேச்சுத் துணை இன்றி சில வேளை இருப்பது, தன் மனதில் தோன்றும் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளக்கூட எவரும் இல்லாது சில வேளை இருப்பது, தனது சுகதுக்கங்களை மனம் விட்டுப் பேச முடியாது சிலவேளை இருப்பது, போன்ற நிலைமைகள், அவர்களை கட்டாயம் துன்பப்படுத்தும்.

மேலும் இவர்கள் தங்கள் பிரச்சினைகளை பிறரோடு பகிர்ந்து கொள்ள முடியாத போது, அவற்றுக்குத் தீர்வு என எதுவும் அவர்கள் கண்ணில் படுவதும் இல்லை. நாளை நமக்கு முதுமை வரும் போது எந்த வகையில் நாம் நடத்தப்பட வேண்டும் என நாம் எதிர்பார்க்கிறோமோ, அப்படியே இன்று நம் முன் நடமாடும் தாய் தந்தையரை, மற்றும் முதியோரை, நாம் நடத்த வேண்டும் என்ற கருத்தினை, நாம் அனைவரும் எமது மனதில் ஏற்றுக் கொண்டாலே இதற்கு விடை இலகுவாகி விடுகிறது எனலாம்.

பொதுவாக நகர்ப்புறத்தில் இந்நிலை மிகவும் மோசமாக உள்ளது. உதாரணமாக பல மூத்த குடிமக்கள் குடும்பத்தை



# முதுமையில் தனிமை

விட்டு பிரிந்து வாழ்வது அங்கு கண்டறியப்பட்டுள்ளது. இது கிராமப் பகுதியில் குறைவு. வயதான காலத்தில் இத்தகைய தனிமையின் கொடுமையை அனுபவிக்கும் நிலையில் யார் யார் என்று பொதுவாக பார்த்தால், குடும்பத்தினரோடு பேச்சுவார்த்தையே இல்லாத நிலையில் இருப்பவர்கள், ஆரோக்கிய குறைபாடு உள்ளவர்கள்,

சமுக நல்லுறவுக்கும், பரிவர்த்தனைக்கும் வாய்ப்பின்றி இருப்பவர்கள் என நாம் வகைப்படுத்தலாம். இத்தகைய பாதிப்புள்ளானவர்களில், நகர்ப்புற முதியவர்கள் கிராமப்புறப் பகுதிகளை விட பொதுவாக, மனோதத்துவ ஆலோசனைகள் அதிகம் தேவைப்படுபவர்களாக உள்ளனர். பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய பிள்ளைகளே பெற்றோரை முதியோர் இல்லங்களில் தள்ளுவதைப் பற்றிய செய்திகளைப் பார்த்து வருந்தியிருப்போம். செய்தியாகப் படிக்கும் போதே நமக்கு வலிக்கிறது என்றால், முதியோர் இல்லங்களில் நடைப் பிணங்களாக வாழும் வயது முதிர்ந்த பெற்றோர்களது மனம் என்ன பாடுபடும்?

குறிப்பாக ஒரு வெளி நாட்டிற்கு குடிவரவாளர்களாக தமது முதுமைப் பருவத்தில் வந்தவர்கள் தம்மைக் அந்த நாட்டின் வாழ்வுச் சூழலுக்குள் பொருத்திக்கொள்வதற்கு எதிர்கொள்ளும் தடைகள் ஒரு புறம் இருக்க, புதிய நாடு, புதிய கலாசாரம், பழக்கமில்லாத கால நிலை, பரிச்சயம் இல்லாத மொழி என்கிற சூழலில் தெரிந்தவர்கள் அதிகம் இல்லாமல் தமது பிள்ளைகளை நம்பியே இங்குவரும் பெற்றோர், தமது பிள்ளைகளால் தனித்து விடப்படும் போது மிகப்பெரும் மனநெருக்கடிக்கு உள்ளாகின்றார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

ஒரு புறம் நோய்களும் இன்னொரு புறம் ஆதரவற்ற தனிமையும் மனதை வாட்டி முதியவர்களைப் பாடாய்ப்படுத்திவிடும். சமீபத்தில் அமெரிக்காவின் அறிவியல் நிறுவனம் முதியவர்கள் பற்றி ஆய்வு ஒன்றை மேற்கொண்டது. ‘சமூகத் தொடர்பு முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்ட நிலையில், தனிமையின் வேதனை மனதை வாட்டுவதால் பெரும்பாலான முதியவர்கள் பிரச்சினைக்கு ஆளாவதாகவும், இந்த மனரீதியான பிரச்சினையால் அதிக அளவில் மரணங்கள் நிகழ்வதாகவும்’ அந்த ஆய்வு சுட்டிக்காட்டியது.

எனவே முதியோர்களை வாட்டும் தனிமையை விரட்டியடிக்கும் வகையில் முதியவர்களுக்கு உணவு பரிமாறுவது, இசையைச் கற்றுக்கொடுப்பது, ஃபேஸ்புக்கை Facebook இயக்கச் சொல்லிக் கொடுப்பது, பிறந்த நாள் கொண்டாட்டங்கள், புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் ஒன்றுகூடல் நிகழ்வுகள், முதியவர்களுடன் ஒன்றாக அமர்ந்து திரைப்படம் அல்லது விளையாட்டுப் போட்டிகளைப் பார்ப்பது போன்ற நிகழ்வுகளை ஒழுங்கு படுத்துவதன் மூலம் முதியவர்களை, தனிமையை மறந்து மகிழ்ச்சியாக வைத்திருக்க முடியும் என நான் நம்புகிறேன்.

இன்றைய அவசர காலத்தில், கணவன் மனைவி இருவரும் வேலை, பிள்ளைகள் பாடசாலை, பல்கலைக் கழகம், இடையில் கொண்டாட்டங்கள், விடுமுறைகள் ... கூட்டுக்குடும்பம் என்றால் வயதானவர்களை கவனிக்க குடும்பத்தில் யாராவது ஒருவர் இருப்பர். ஆனால் இன்றோ பலர் தனிக்குடும்ப முறை என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனால் இப்படி நேரம் இன்றி அலையும் உலகில், தாய் தந்தையருக்கு ஒரு பாது காப்பாக முதியோர் இல்லம் சேர்ப்பவர்கள் இன்று பலர். இதில் பெரும் தவறு இருப்பதாக நான் கருத வில்லை. ஆனால், அதோடு நின்று விடுகிறார்கள். முற்றுப் புள்ளி வைத்து விடுகிறார்கள். அங்கு தான் தவறு ஏற்படுகிறது? அங்கு ஒரு உயிர் ஏங்குகிறது என்பதை மறந்து விடுகிறார்கள்.

‘கருவறையில் இடம் தந்தேன்..! உன் வீட்டில் நான் வசிக்க.. இல்லையா சிறு அறை.. உள்ளத்தில் ஒரு மூலையில்... ஒருக்கா எம்மை நினைக்க... ஒருக்கா எம்மை பார்க்க .. ஒருக்கா எம்முடன் கதைக்க... ’ இப்படி அது தவிக்கிறது. மேலும் வசதி வாய்ப்புகள் இருந்தும் சில முதியோர்களை தனிமை வாட்டுகிறது. மனம் விட்டு பேச வீட்டில் யாரும் இல்லாததால் சில முதியோர்கள் தாங்களே விரும்பி முதியோர் இல்லத்தில் அடைக்கலம் புகுந்து கொள்கிறார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது. ஒவ்வொரு மனிதனுக்கும் முதுமை பருவத்தில் அன்பும், ஆதரவும் கட்டாயம் தேவை. அது கிடைக்காத முதியோர்கள் வீட்டை விட்டு வெளியேறுகின்றனர். சிலர் வீட்டை விட்டு துரத்தப்படுகிறார்கள். இந்த அவல நிலை மாற ஒவ்வொரு மனிதனும் சிந்திக்க வேண்டும்!

**நன்றி: கந்தையா தில்லைவிநாயகலிங்கம், அத்தியடி, யாழ்ப்பாணம்.**



# வலை

அங்கம்: 06

கொற்றவை



பஸ்ஸில் நிறைய இடம் இருந்தது. ஒரு குழந்தையைப் போல யன்னல் புறமாக இடம் பிடித்து 'அக்காடா' என்று உட்கார்ந்தான் ஆனந்தன். பஸ் கிளம்ப இன்னும் நேரம் இருக்கலாம். எல்லோரும் வந்து சேரும்வரை காத்திருக்கிறார்கள் போல் இருக்கிறது. சொகுசு வண்டி. உட்புறத்தில் அழகாக, இருக்கைகள் மெத்து மெத்தென்று இருந்தன. இப்படியான வண்டிகளில் ஆனந்தனுக்குப் பழக்கமில்லை. அவன் ஏறியதெல்லாம் அந்தக் கால அரசாங்க சேவை பஸ் வண்டிகள், அதுவும் அடுத்த ஊரில் வரும் போதே இங்கு சத்தம் கேட்டுவிடும். அவ்வளவிற்கு அரதற் பழசாகி லொடலொடவென்று இருக்கும். ஆனால், ஆனந்தனின் பிரியத்திற்குரியது 'தட்டி வான்' தான். குனிந்துதான் நிற்க வேண்டும் என்றாலும் ஏதோ அவைகள் தான் ஊரோடு ஒத்துப் போவதுபோல ஒரு உணர்வு.

பஸ் நிறையத் தொடங்கிவிட்டது. வந்த ஒரு சிலர் அவனை வியப்புடன் பார்த்தார்கள்.

''என்ன நீங்கள் இங்கை.? கட்சிப் பக்கம் வரமாட்டியள்!!!'' என்று இழுத்தவர்களிடம்.

''வேலையாளா வாறன்.... வேற ஒண்டுமில்லை...'' என்று ஐயத்தைத் தீர்த்தான் ஆனந்தன். இடையில் வதனியின் தொலைபேசி அழைப்பு கிடைத்தது. சுருக்கமாக,

''ஓம்..! ஏறீட்டன்'' என்று கதையை முடித்தான். வதனி வேறு சிலருடன் காரில் வருகிறாவாம். அங்கு சந்திப்பதாகச் சொன்னா.

'' நல்ல புதுப் பாட்டாப் போடுங்கப்பா...! கொழும்புப் பஸ்களில என்ன சுப்பர் படங்கள் போடுவாங்கள் தெரியுமோ....?'' என்றபடி முன்வரிசையில், ஏற்கனவே பிடித்து வைத்திருந்த இருக்கையில் அமர்ந்தார் ஒருவர்.

''உஸ்ஸ்....! என்னமா வேர்த்துக் கொட்டுது..!! அந்த ஏ.சியைக் கொஞ்சம் கூட்டி விடும் தம்பி...!''

இப்படிப்பட்ட சொகுசு வண்டிகளில் தனக்கு பரிச்சயம் அதிகம் என்பதையும், அதிலும் அடிக்கடி கொழும்புப் பிரயாணம் செய்கிறவர் என்பதையும் சொல்லாமற் சொல்லும் யார் இவர்...? சரியான விலாசக்கார ஆளா இருக்கிறாரே....?

''அவர் கட்சியின்ர புதுக் கணக்காளர்..! கொஞ்சம் வில்லங்கம் புடிச்சவர்....'' பக்கத்து இருக்கையில் இருந்தவர் ஆனந்தனின் காதைக் கடித்தார். பலதரப்பட்ட மக்களுடன் பழகியிருந்தாலும், மனிதர்களின் இயல்புகள் என்னவோ புதிது புதிதான அர்த்தங்களைத் தருவதாக ஆனந்தனுக்குப்பட்டது.

பஸ் புறப்பட்டது. இதமான ஏ.சி குளிரில் அநேகர் உறங்கத் தொடங்கி விட்டனர். ஆனந்தனின் நெஞ்சை கடந்தகால நினைவுகள் சூழ்ந்து அலைக்கழிக்க ஆரம்பித்தன. இப்படியான ஒரு காலைப் பொழுதிற்தான் வீட்டைவிட்டு வெளியேறினான் ஆனந்தன். விடலைப் பருவம் மற்றவர்கள் அசட்டுத் துணிச்சல் என்று சொன்னாலும்.. ஒரு முடிவோடுதான் பஸ் எடுத்திருந்தான் அவன்.

அப்போது அமைதிப்படை ஊரை நிறைத்திருந்த காலம். நம்பியவர்கள் இப்படி நடுமுதுகில் குத்துகிறார்களே என்ற தீராத வெறுப்பு அவர்கள் மேல் அவனுக்கு இருந்தது. 'இன்றைக்கு, தன்னுடைய வெறுப்பைக் காட்டாமல் கவனமாகக் கதைக்க வேணும்' என்ற முடிவில் இருந்தான் அவன். அவன் தேடிச் செல்லும் பொறுப்பாளர் இருக்கும் 'ஏரியா' வை இவர்களும் மோப்பம் பிடித்திருந்தனர். இதனால் அதைச் சூழவுள்ள பிரதேசத்தில் இவர்களின் நடமாட்டம் அதிகம் என்று ஏற்கனவே ஆனந்தன் அறிந்து வைத்திருந்தான்.

''நீர் நல்லாப் படிக்கிற பிள்ளை எண்டு அறிஞ்சனான் தம்பி...! இப்ப படிப்பைக் குழப்பாதையும்.... எங்கட பிள்ளையள் படிக்க வேணும்.... படிச்ச தலைமுறை நாட்டுக்கு வேணும்... அதைத்தான் அவரும் விரும்புவார்.... இப்ப நாங்கள் பாக்கிறம்.... உங்கடை தேவை வரேக்கை வாங்கோ.... எல்லாருக்கும் நாட்டுக்கு சேவை செய்ய உரித்து இருக்குத்தானே! என்ன....?''

இந்தப் பதில் ஆனந்தனைத் தூக்கிவாரிப் போட வைத்தது. துவக்குடன் ஊருக்குள் வரும் வேறு சில குழுக்கள் பள்ளிக்கூடப் பிள்ளைகளை தங்களுடன் கூட்டிச்செல்ல படும் பிரயத்தனம் ஞாபகத்திற்கு வந்தது. அவர்களுக்கும் இவர்களுக்கும் எவ்வளவு வித்தியாசம்? தான் எடுத்த முடிவு சரிதான் என்று பட்டது. இதிலிருந்து மாறப்போவதில்லை என்ற உறுதியுடன்

''நான் போகேல்லை அண்ணை..! உங்களோட வாறன். இனி வீட்டை போகேலாது.!''

எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ஆனந்தன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. ஆமிக்காரர் அருகில் வந்து விட்டார்கள் என்ற செய்தியும் வர, வேறு வழியில்லாமல் அவனையும் கூட்டிக்கொண்டு போகவேண்டிய சூழ்நிலையாகி விட்டது. ஆனாலும், அவனை அவர்கள் முழுதாக உள்ளெடுக்கவில்லை. வேறொரு இடத்தில் அவனைத் தங்க வைத்து படிக்க விட்டார்கள். அதே நேரத்தில் ஐயம் எழாமல் வேவு பார்க்கும் முறையையும் சொல்லிக் கொடுத்து ஆனந்தனையும் ஒரு அங்கத்தவன் ஆக்கினார்கள்.

அது ஆனந்தனுக்கு மிகவும் பிடித்திருந்தது. புத்திக்கூர்மையுடனும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சரியான முடிவுகளை எடுத்தும் சிறந்த ஒற்றாடுபவனாக வளர்ந்த ஆனந்தன் அங்கத்தவர்களின் செல்லப் பிள்ளையாக வளர்ந்தான். சிறு வயதினனாக இருந்தாலும் அவனை நம்பி எந்தச் செய்திப் பரிமாற்றத்திலும் அவனை ஈடுபடுத்தும் அளவிற்கு தன்னில் அவர்களுக்கிருந்த நம்பிக்கை ஆனந்தனுக்கு ஒரு இறுமாப்பை ஆரம்பத்தில் கொடுத்திருந்தது. ஆனால் போகப்

போக, எல்லோரிடத்திலும் ஏதோவொரு திறமை ஒளிந்து கிடந்ததையும், தேசத்திற்காக எதையும் செய்யத் தயாராகவிருந்த அவர்களின் தற்துணிவும் அவனின் இறுமாப்பைத் தகர்த்தெறிந்து விட்டன. இது எல்லோரையும் சமமாகப் பார்க்கும் படிப்பினையை ஆனந்தனுக்குக் கொடுத்தது.

'ம்ம்..!! அது ஒரு பொற்காலம்..!!'

அவனையும் மீறி ஒரு பெருமூச்சு எழுந்தது.

ஏ.சியை நிறுத்தி விட்டதால் யன்னல்களைத் திறந்து வைத்திருந்தார்கள். இதமான காற்று தூக்கத்தை வரவழைத்தது. சொகுசான இருக்கையிலும் இடுப்புப் பகுதியில் கடுமையாக வலித்தது. 'விழுந்த அடிகள்' அப்படி. அந்தச் சித்திரவதைகளின் நினைவுகள் கூட அச்சுறுத்தும். 'இருக்கத்தான் வலிக்குது. போய் காலாற நடந்தால் சரியாப் போம்.' என்று தன்னை சமாதானப்படுத்திக் கொண்டான். ஆனையிறவு முகாமிருந்த பிரதேசத்தைக் கடந்தபோது பல்லாயிரம் நினைவுகள் கிளர்ந்தன. அந்தப் பக்கம் பார்க்க விருப்பமற்று, அருகிலிருந்தவரிடம் பேச்சுக் கொடுத்தான்.

''தர்மபுரத்திலதான் தங்கப்போறம். பின்தங்கின இடம். இங்கதான் சில வேலைத்திட்டங்களுக்கு கொட்டில் போட நீங்கள் வேலை செய்யப் போறியள். எங்கடை மாநாடும் இங்கதான் நடக்கும்....'' என்றார் அவர்.

வதனி சொன்ன அந்தப் பிள்ளையின் வீட்டவர்கள் விசுவமடுவில் இருப்பதை அவன் அறிந்து வைத்திருந்தான். வேலை இடையில் கிடைக்கும் பொழுதுகளில் என்ன நடந்தது என்று விசாரித்து அறிய வேண்டும் என்று முடிவெடுத்தான் ஆனந்தன். பலபேரின் பிரச்சனைகளுக்கு தீர்வு கிடைக்கலாம் என விளக்கினால், கட்டாயம் ஒத்துழைப்புத் தருவார்கள் என்ற நம்பிக்கை அவனுக்கிருந்தது.

தர்மபுரத்தில் ஒரு இனிய அதிர்ச்சி காத்திருந்தது. அங்கிருந்த பெட்டிக்கடையை நடத்திக் கொண்டிருந்தவர் வெளுத்துப் பழுப்பாகியிருந்த தாடி மீசையுடன் இருந்தார். கட்சிக்காரர் கட்சி வேலைகளைத் தொடங்கி விட்டார்கள். ஆனந்தனுக்கு மறுநாள்தான் வேலை ஆரம்பம். காலாற நடக்கலாமே என்று வந்தபோதுதான் இந்தப் பெட்டிக்கடையைக் கண்டான்.

'எங்கேயோ பார்த்தது போல இருக்கே. யாரிவர்..?' முகவாயைத் தடவியபடி கடைக் கண்ணால் அவரைப் பார்த்தான். அவரும் கண்ணைச் சுருக்கி யோசனையுடன் அவனைப் பார்ப்பது தெரிந்தது. கேட்டே விடுவது என்று திரும்பிய போதுதான் பளிச்சென்று மூளையில் உறைத்தது.

''அட..! சுகந்தன் அண்ணை....!! நீங்கள் சுகந்தன் தானே? அண்ணை....! சொல்லுங்கோ அண்ணை...!''

'' நீ... நீ.... வசந்தனல்லோ? நீ... இல்லையெண்டு அறிஞ்சன்...'' சந்தேகமும் குழப்பமுமாகக் கேட்டார் அவர்.

'' நான்தான் அண்ணை! இத்தினை வருசமாப் பிடிச்சு வச்சிருந்து விட்டிட்டாங்கள்...''

ஆனந்தனை அறிந்தபின், அவரின் கண்களில் கண்ணீர் பெருகியது. சுகந்தன் ஆனந்தனுக்கு 'சீனியர்'. அவனின் விருப்பத்திற்குரிய அண்ணை. எதற்கும் கலங்காத உறுதியுடன் இருப்பவர் என்று பெயரெடுத்தவர். மடிப்புக் கலையாமல் சுத்தமாக உடையணியும் அவரின் பாங்கு ஒரு தனியழகாக இருக்கும். அப்படிப்பட்டவர் அலங்கோலமாக, தாடி மீசையுடன். அழுக்கு சேட்டும் சாரமுமாக. நம்ப முடியவில்லை. நன்கு படித்தவர் அவர். அவர் ஆங்கிலம் பேசும் அழகே அழகு.

இருவரும் தங்கள் தங்கள் கதைகளைப் பரிமாறிக் கொண்டார்கள். இழப்புகளை, இழந்து போனதை எண்ணி வேதனைப்பட்டார்கள். அவரை உயிருடன் காணுவோம் என்று ஆனந்தன் எண்ணியிருக்கவேயில்லை. ஒரு விதத்தில் சந்தோசமாகவும் இருந்தது. கடையின் பின்புறமிருந்து சாயம் போன சேலையுடன் வந்த பெண்மணிதான் அவரின் மனைவியாக இருக்க வேண்டும்.

'' வணக்கம் அக்கா..!''

அறிமுகம் முடிந்தது. கடைக்கு ஆட்கள் வந்திருந்தார்கள். ஆனந்தன் அவர்கள் போகும்வரை ஒதுங்கி நின்றான். சற்று நேரத்தில் கடையில் யாருமில்லை. அவனும் சுகந்தனும் அவரின் மனைவியும்தான். சுகந்தன் ஆனந்தனை ஒரு புருவச் சுளிப்புடன் பார்த்தார்.

'' தம்பி..!! நீர்..நீர்... வசந்தன்தானே? நீர் இல்லையெண்டு அறிஞ்சன்...!''



தூக்கிவாரிப் போட்டது ஆனந்தனுக்கு.

'என்ன இது? மறுபடியும் இப்பதான் கண்ட மாதிரிக் கேட்கிறார்..!'

குழப்பத்துடன் நின்றவனுக்கு சுகந்தனின் பின்னால் நின்ற மனைவி சாடை காட்டினார்.

சுதாகரித்துக்கொண்ட ஆனந்தன் மறுபடியும் முன்பு கதைத்த அத்தனையையும் சொன்னான். அவரும் இப்போதுதான் முதலில் கேட்பதுபோல அவதானமாகக் கேட்டார். கண்ணீர் வடித்தார். அதன் பிறகு நன்கு தெளிவாகக் கதைத்தாலும் இடையிடை அவர் எல்லாவற்றையும் மறந்து போவதையும், முன்னுக்குப் பின் முரணாகக் கதைப்பதையும் புரிந்து கொள்ள முடிந்தது.

சுகந்தன் அங்கத்தவனாக இருந்தபோது உட்பிரிவில் இருந்த ஒருவரை மணமுடித்ததாக அறிந்திருந்தான். அவரும் உள்ளே ஒரு முக்கியமான பிரிவில் இருந்தார். ஆனந்தனுக்கு அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவாக இருந்தன. அவரின் மனைவியை அவன் முன்பு அறிந்திருக்கவில்லை. சுகந்தனின் மனைவி சமயம் பார்த்து பேச வந்தார்.

''அக்கா...!! கேள்விப்பட்டிருக்கிறன். ஒருநாளும் உங்களைச் சந்திக்கேல்லை கடைசி வரையும் முன்னுக்கு நிண்டனீங்களாம் பிள்ளை ஒண்டு இருக்கல்லோ..? என்ன செய்யிறா...?''

''நான் அவவில்லை அண்ணை....'' அமைதியாக அவ சொன்னது ஆனந்தனை அதிர்ச்சியடைய வைத்தது.

'' அப்ப நீங்கள்..? அவ...?''

''அவவும் பிள்ளையும் அப்பவே இல்லை.... அதைக்கூட இவர் தாங்கிக் கொண்டவர்... இவர் எவ்வளவு விசுவாசமானவர் எண்டு தெரியுந்தானே.? இத்தினை வருசமாக் கட்டி வளர்த்தது இப்பிடி முடிஞ்சு அதே எண்டு தாங்கேலாமை இப்பிடி ஆகீட்டார்.... உயிரைக் குடுத்தவை தப்பீட்டினம்.... இருக்கிறவைக்கு நித்தஞ் சாவுதான் ... இல்லையோ..? மனமும் குழம்பி நடுத்தெருவில நிண்டார்.... இவரைக் கொண்டுபோய் என்ன செய்யிறதெண்டு அவங்கள் விட்டுட்டாங்கள் எனக்கும் ஆருமில்லை. இப்ப அவருக்கு நான், எனக்கு அவர்..''

ஆனந்தனின் அதிர்ச்சியைப் பார்த்தவ,

''இல்லை..! நான் அங்கை இருக்கேல்லை..''

அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி. பிறகு சந்திப்பதாகக் கூறி தங்கியிருந்த வீட்டிற்கு விரைந்தான் ஆனந்தன். இழப்புகளின் தீவிரத்தைத் தாங்க முடியவில்லை. இப்போதுதான் நடைபெற்றது போல முகத்தில் அறைந்தது இழப்பின் வடு. நாட்டின் பாதிப்பினால் எத்தனையோ பேர் மனப் பிறழ்வுக்கு உள்ளாகியிருப்பது தெரியும். இருந்தாலும், நேரில் அதுவும் மிகவும் நேசத்துக்குரிய ஒருவரை இப்படிப் பார்த்ததைத் தாங்க முடியவில்லை.

'ஐயோ!! எப்பிடியிருந்த மனுசன்.!'

கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியாமல் துவண்ட கால்களுடன் தங்குமிடத்தை நோக்கி நடந்தான் ஆனந்தன்.

**தொடரும்....**

ப்ரியா செல்வம்



# சாயக் கோப்பை

பெரட்டு சங்கு ஊதுனதும்
காலையில
வறட்டு ரொட்டி
கொஞ்சம் கசக்கும்
தேயிலை சாயமும்
இடுப்புல ரெட்டு கட்டி
தலையில கொழுந்து கூடையும்
மாட்டிக்கிட்டு
கொட்டும் குளிர் பனியில
எங்கம்மா போகையில.

கிழிஞ்ச பாயில எங்கப்பா
சீக்கு புடிச்சு தூங்கயில..

வாங்குன கடனை கட்ட
பொஸ்தகம் சுமக்காம
நானும் பட்டணம் போறேன்
வீட்டு வேலைக்கு தான்.....!!

பட்டணத்து
மொதலாளி அவக..
சின்ன பொண்ணுனு கூட பாக்காம
மாடு மாரி வேலை வாங்கி

துட்டு ரெண்டு கொடுத்தாலும்.
எங்கம்மா கொண்டு போற
தேயிலை சாய
கசப்பும் மாறல.
எங்க லயத்து
வாழ்க்கை கசப்பும் மாறல.

பத்தடி காம்பராவுல
வாழ்ந்து போன
எங்க லயத்து வாழ்க்கை!!
பாடையில போனாலும்
மறந்து போகாது
பழகிப்போன
தேயிலை சாயம்
மருந்துக்கு கூட
மறக்காது
எங்க ஆயம்...!!

நாட்டுக்காக
உழைக்கிறோங்க!
எங்க வாழ்க்கை மட்டும்
தழைக்கலங்க..

எங்களை
சொரண்டி வாழும்
அரசியல்வாதி - வாழ்க்கை
சொர்க்கமாக ஜொலிக்குதுங்க!!

நாங்க மட்டும்
தொலைஞ்சு தான்
போயிட்டோமுங்க....!
தேயிலை சாய
கசப்பும் மாறலங்க.!
எங்க அடிமை வாழ்க்கை
கசப்பும் மாறலங்க...!

இந்த நாட்டுக்கு
டொலர் கொண்டு வந்து தரும்
ஆணி வேரே நாங்க தாங்க!!
நாளைய எங்க சாதி சனம்
ஒய்யாரமாக வாழனுமேங்க!!
அதுக்காக சரி
மனசுக்குள்ள
வஞ்சகம் இல்லாமல்
சிரிக்கிறோங்க!!
கையில
தேயிலை சாய தண்ணி
கோப்பையோட...!!